Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 20

27 SEP 1971
UNDERGRADUATE LIBRARY

# ஈழநாடு

வார மலர்

"எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்பதறிவு"
—திருவள்ளுவர்.

காலம் பெறுமதியானது. துரித சலவைக்கு மில்க்வைற் சவர்க்காரம் பாவியுங்கள் பாவித்த மேலுறைகளைச் சேகரித்து அனுப்பி அறிவு நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப்
தொழிற்சாலை
த. பெ. இல. 77,
யாழ்ப்பாணம்.

மலர் 13 | புரட்டாதி 10 | ஷஃபான் 5 | ஞாயிற்றுக்கிழமை | (26—9—71) | இதழ் 227

# ரயிலில் செல்லும் பெண்கள் அனுபவிக்கும் துன்பம்!

## உடுப்பிட்டி எம். பி. புகார்

கொழும்பு. சனி

**ரயிலில் செல்லும் பெண்கள் பெரும் துன்பத்துக்குள்ளாவதாக உடுப்பிட்டி எம் பி ஆட்சிமன்றத்தில் குறைபாடு தெரிவித்தார்**

"ஒரு முறை ஒரு பெண் ரயிலில் பிரயாணம் செய்யும்பொழுது இராணுவத்தினர் அவரின் உறுப்புகளைத் தொட்டு அப்பகுதிகளுக்குள் கைக்குண்டுகளை மறைத்து [illegible] என்று பரிசோதனை நடத்தியுள்ளனர்."

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு கே. ஜெயக்கொடி ஆட்சிமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், ஒரு முறை சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் ரயில் பெட்டியில் தூங்கிக்கொண்டிருக்கையில் ஒரு சிறுவன், அவர் ஒரு எம். பி. என்று சொல்லவும் இராணுவ வீரர்கள் திடீரெனத் தட்டி தங்கள் சோதனையை ஆரம்பித்துள்ளனர்.

பளை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் ரயிலில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளையும், அவர்கள் கொண்டு செல்லும் பொதிகளையும் சோதனை இடுகின்றனர். இது மனிதத்தன்மையற்ற ஒரு செயலாகும் என்றார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

பயங்கரவாத இயக்கத்துடன் எவ்வித தொடர்புமில்லாதபொழுது இவ்வித சோதனைக்கு [illegible] மற்றும் [illegible]களில் ஓடிக்கொண்டிருக்கும் ரயிலில் இவ்வித சோதனைகள் நடைபெறுவதில்லை. எனவே வடபகுதியில் இவ்வித சோதனைகள் நடப்பதற்கு வேறு காரணம் இருக்கவேண்டும். இருந்தபோதிலும் இதுபற்றி பிரதமர் கவனஞ் செலுத்தவில்லை என்றார். (பி. பி ஏ)

### மத்திய கல்லூரி வாணிவிழா

(நமது நிருபர்)

[illegible] யாழ்ப்பாண மத்திய கல்லூரி வாணிவிழா கொண்டாடப்படவிருக்கிறது. இவ்விழாவில் வித்துவான் க. ந. வேலன் உரையாற்றுவார். திரு. எஸ். சோமசுந்தரம் இன்னிசை விருந்தளிப்பார். கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

நாட்டைவிட்டு வெளியேறுமாறு

## 105 ரஷ்ய அதிகாரிகளுக்கு பிரிட்டன் உத்தரவு

லண்டன் செப். 25

பிரிட்டனிலுள்ள சோவியத் தூதரகம், வர்த்தக நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த 105 அதிகாரிகளை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறுமாறு பிரிட்டிஷ் [illegible] ளது.

பிரிட்டனில் இருக்கும் சோவியத் தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், சோவியத் வர்த்தக அமைப்புக்களில் கடமையாற்றும் நிபுணர்களும் உளவு வேலைகள் பார்த்ததாக பிரிட்டன் குற்றஞ்சாட்டியுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரிகளுக்கு சோவியத் யூனியனைச் சேர்ந்த கே. பி. ஜி உளவு ஸ்தாபனங்களுடன் தொடர்புண்டென்றும் அவர்கள் பிரிட்டனின் பாதுகாப்பு நிலையங்கள், கடற்படைத்தளங்கள் மற்றும் பாதுகாப்புஇடங்கள்பற்றிய இரகசியங்களை அறிய முயன்றார்கள் என்றும், இவ்விதமான செயல்கள், பிரிட்டனுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையேயுள்ள சுமுக [illegible] றும் பிரிட்டிஷ் அரசாங்கம் சோவியத் அரசுக்கு அனுப்பி வைத்த கண்டனக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இப்பொழுது பிரிட்டனிலிருக்கும் 90 அதிகாரிகளை நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ள பிரிட்டிஷ் அரசாங்கம், சோவியத்யூனியனுக்குச்சென்றிருக்கும்சோவியத்தைச் சேர்ந்த15 அதிகாரிகளை பிரிட்டனுக்கு திரும்ப வேண்டாமென்றுஉத்தரவிட்டுள்ளது.

ஆடம்பரமற்ற

## பண்டாரநாயக்கா நினைவு தினம்

### இன்று நாடு கொண்டாடுகிறது

கொழும்பு, சனி

காலஞ்சென்ற பிரதமர் அமரர் எஸ் டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா நினைவு தினம்இன்று ஆடம்பரமற்ற முறையில் நாடெங்கிலும் கொண்டாடப்படுகிறது. நாடு மதிப்புக்குரிய ஒரு மறைந்த தலைவரின் 12-வது நினைவு தினத்தைக் கொண்டாடுகிறது.

ஹொரகொல்லையில் பண்டாரநாயகா சமாதியை இன்று காலை 7-40க்கு கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா, சென்றடைவார். பிரதமரும், அவரது பிள்ளைகளும், நெருங்கிய உறவினர்களும் அங்கு சென்றடைவர். 'பன்ஸில்' ஓதும் நிகழ்ச்சி இடம்பெறுவதுடன், சமாதிக்கு மலர்வளையம் சாத்துவார்கள்.

காலை 11 மணிக்கு பார்லிமெண்டுக்கு முன்னுலுள்ள பண்டாரநாயக்கா சமாதிக்கு கவர்னர் ஜெனரல் மலர்வளையம் சாத்துவார்.

நாட்டின் பல பகுதிகளிலும் 'இறுதியாத்திரை' என்ற திரைப்படம் இன்று காண்பிக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தசுவாமிகோவிலிலும், பெருமாள்கோவிலிலும் சமயச்சடங்குகளும், விசேஷபூசையும் இடம்பெறும். யாழ். நாகவிகாரையிலும் விசேஷ நிகழ்ச்சிகளும் இடம்பெறும்

வெளிநாடுகளின் தலைநகரங்களிலும் பண்டாரநாயக்கா நினைவுதினம் கொண்டாடப்படுகிறது.

பாங்கொக், லண்டன், மாஸ்கோ, ஒட்டாவா, சென்னை, பம்பாய் போன்ற பல வெளிநாட்டுத் தலைநகர்களில் பண்டாரநாயக்கா நினைவுதினம் கொண்டாடப்படுகிறது.

## கைதிகளுக்கு மன்னிப்பு; சிறந்த நூலுக்கு ரூ. 1000

கோட்டை, சனி

காலஞ்சென்ற இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயகாவின் நினைவுதினம் இன்று அனுஷ்டிப்பதை முன்னிட்டு நாடெங்கிலுமுள்ள சிறையிலிருக்கும் 465 கைதிகளுக்கு மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுகிறார்கள். 700 கைதிகளுக்கு தண்டனை குறைக்கப்படுகிறது.

அமரர் பண்டாரநாயக்கா பற்றி சிறந்தநூல் எழுதியதற்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தைச் சேர்ந்த திரு. விமல் அபயசுந்தராவுக்கு 1000 ரூபாய் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

### வானொலி விசேஷ நிகழ்ச்சி

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - பண்டாரநாயகா நினைவுதின சிறப்பு நிகழ்ச்சிகள் - காலை 7-45 ஹொரகொல்லையில் நடைபெறும் நினைவுதின விழா வைபவங்களின் நேர்முக வர்ணனை - அஞ்சல். காலை 10-00 மணிக்கு தபால் தந்தி அமைச்சர் திரு. செ. குமாரசூரியரின் பேச்சு. காலை 10-35 மணிக்கு மக்கள்பிரதிநிதிகள்சபை முன்றிலில் நடைபெறும் வைபவங்கள் பற்றிய வர்ணனை. இரவு 7-30 மணிக்கு 'நவயுகச்சிற்பி' உரைச்சித்திரம், இரவு 9-20 மணிக்கு தபால்தந்தி அமைச்சர் திரு செ. குமாரசூரியர் உரை நிகழ்ச்சி.

## சட்டவிரோதமாக மாடு வெட்டியதாக வழக்கு

யாழ்ப்பாணம், சனி

கடந்த ஒருமாத காலத்தில் சின்னக்கடை, நாவாந்துறை பகுதிகளைச் சேர்ந்த சுமார் 10 பேர் சட்டவிரோதமாக மாடு வெட்டியதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இவர்கள்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப்பொலிஸைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் திரு. வராகொட, யாழ். மாநகரசபை உணவு பரிசோதகர் திரு. எஸ். ஏ. ஆனல்ட்டின் உதவியுடன் இவற்றைக்கண்டுபிடித்தார்.

பாலில் கலப்படம் செய்ததாக மூவர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் யாழ். மாஜிஸ்திரேட் திரு. கொலின் மெண்டிஸ் தலா 200 ரூபா அபராதம் விதித்தார். யாழ். மாநகரசபை உணவுப் பரிசோதகர் திரு. எஸ். ஏ. ஆனல்ட் இவ்வழக்குகளை தாக்கல் செய்தார்.

நாட்டியாலயா
நடனக் கல்லூரி
29-9-71 விஜயதசமித் தினத்தன்று புது வகுப்புகள் (பரத நாட்டியம்) ஆரம்பிக்கப்படும்.
ஆசிரியை: திருமதி விமலா யோகநாதன்.
சேர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
அம்மன் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 3044

## அஷ்டதிக்கு

# கலைக் களஞ்சியம் - கயிலை குருமணி - கிழக்குப் பாகிஸ்தான்

**கலைக்களஞ்சியம்**

சென்னை தமிழ் வளர்ச்சி கழகத்தார், கலைக்களஞ்சியத்தின் பத்தாம் தொகுதியின் இணைப்புத் தொகுதியை வெளியிட்டு ஒரு பெரிய சாதனையை நிறைவேற்றியுள்ளனர். இதற்காக அக்கழகத்தையும் சிறப்பாக பிரதம ஆசிரியர் ம. ப. பெரியசாமித்தூரன் அவர்களையும் பாராட்டவேண்டும். தருமை ஆதீனத்தார் திரு. தூரன் அவர்களுக்கும் பொன்னாடை போர்த்தி பட்டமளித்துக் கௌரவித்துள்ளது மிகவும் பொருத்தம்.

அவ்விழாவிலே கலைக்களஞ்சிய ஆசிரியர் பேசுகையில் அதில் பல குறைகள் இருக்கலாமென்று கூறி ஒரு குட்டிக்கதை சொன்னார்.

'ஒருசமயம் முருகப்பெருமான் ஒருபூனையின் கன்னத்திலே கீறிவிட்டார். மறுநாள் அன்னையின் கன்னத்தில் கீறல் இருந்தது. அம்மா! உன் கன்னத்தில் எப்படி இந்தக் கீறல் வந்தது? என்று கேட்டாராம் முருகப்பெருமான். "உலக உயிர்க் கூட்டங்கள் அத்தனையுமாகநான் இருப்பதால் பூனையின் கன்னத்தில் ஏற்பட்ட கீறல் என் கன்னத்திலும் ஏற்பட்டது என்று அம்மையார் சொன்னார்" என்று கூறி, மக்களிடம் ஏற்படும் குறைகளுக்கு அரசன் தண்டிக்கிறான். நான் கலைக்களஞ்சியத்தில் செய்துள்ள பல குறைகளுக்கும் எந்த வித தண்டனை அடிவாங்கி இருக்க வேண்டும்!' என்று மிக அடக்கமாகச் சொன்னார் அவர்.

ஆனால் தவறுகள் ஏதும் இருப்பினும், இவ்வளவு மகத்தான சாதனையைச் செய்த அவர் நிச்சயம் பெருமைகொள்ள நியாயமுண்டு. தமிழ்கூறும் நல்லுலகமனைத்தும், சிறப்பாக தமிழ் ஈழமும் அவரையும் அவரது சாதனையும் நன்றியுடன் போற்றும். இந்த இணைப்புத் தொகுதியில் ஈழத்துத் தமிழ் மகான்களான ஸ்ரீலஸ்ரீ இலக்கண சுவாமிகள், யோகர் சுவாமிகள், வித்வத் சிரோமணி கணேசையர் இவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் சேர்ந்துள்ளது இக் கலைக்களஞ்சியத்தைச் சிறப்புச் செய்வதாகும். இம் மூன்று மகான்களின் வாழ்க்கை வரலாறுகள் ஈழத்திலுங்கூடப் பல தமிழருக்குத் தெரியாது. இவற்றை இந்நூலில் இரத்தினச் சுருக்கமாகவைத்தீஸ்வரவித்தியாலயத்தின் முன்னாள் முதல்வர் ச. அம்பிகைபாகன் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். இதற்காக அவருக்கும் ஈழத்தின் நன்றி உரித்தாகும்.

இந்நாட்டில் வாழ்ந்த பல பெரியோர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய ஒரு களஞ்சியத்தை சிறிய அளவிலாவது வெளியிட முடியாதா? கலைமகள் விழாவைச் சிறப்பாக இங்கு நடத்துபவர்கள் சேர்ந்து, இவ்வித உருப்படியான பணியைச் செய்தால் அது கலைமகளுக்கும், ஈழத்துக்கும் செய்யும் மேலான தோர் பணியாகும். கலைமகள் அருள் செய்வாராக.

0 0 0

கலைக்களஞ்சியம் ஆசிரியர் ம. ப. பெரியசாமித்தூரன் அவர்களுக்கு "செந்தமிழ்க் கலைச்செல்வர்" என்ற பட்டத்தை தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கி கௌரவிக்கையில் அருளிய ஆசியுரையில்போது குறிப்பிட்டதாவது:

"நம்முடைய தமிழோ அல்லது வடமொழியோ எந்த நூலை எடுத்தாலும் அடிப்படையிலே தெய்வசக்தியைத்தான் கூறுகிறது. மொழித்துவேஷமே இல்லை. அப்பர் சுவாமிகளை விடச் சிறந்திருந்தவர் இருப்பாரா என்றும் இனிமேல் இருக்கப் போகிறாரா என்றும் சொல்ல முடியாது".

"1300 ஆண்டுகளுக்கு முன்னரே "ஏமாப்போம், பிணியறியோம் பணிவோம் அல்லோம் இன்பமே எந்நாளும் துன்பமில்லை, நமனை அஞ்சோம்" என்று சொன்னவர் அவர் ஒருவர்தான். ஒரு தனி சாம்ராஜ்ஜியத்துக்கு அரசனாகிய மகேந்திரவர்மப் பல்லவனை எதிர்த்து நின்றவர் அவர்தான். அவனை சைவ நெறிக்கு அழைத்த பெருமை அப்பர் பெருமானையே சாரும். அவரே "வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண்" என்று சொல்லுகின்றார். ஆகையினால், எந்தமொழியாக இருந்தாலும் அதன் உட்பொருளினை நோக்கி அதனைக் கூறுகின்ற பெரியோர்கள் நோக்கத்திலே செல்லவேண்டும். முன்னோர்கள் செய்ததை நாம், அந்த அடிப்படையிலே அந்தந்த வரும் மாறுதல் வழிபாடு செய்தல்வேண்டும். அந்த வழிபாடுதான் இறைவனிடத்தே நம்மை ஒற்றுமைப் படுத்தும்" என்றார்.

ஆலயங்களில் தமிழ், வடமொழி இரண்டிலும் அர்ச்சனை செய்யலாமென்பது ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமணியின் கருத்தா? அல்லது முன்னோர் கடைப்பிடித்த வழக்கத்துக்கு மாறுபடக்கூடாதென்பதா? தருமை குருமகா சந்நிதானத்தின் கருத்துக்கு மாறாக, குன்றக்குடி அடிகளார் எதுவும் செய்யமாட்டார். இம் முக்கிய விஷயத்தில் தமிழகத்திலுள்ள எல்லா ஆதீனங்களும் சேர்ந்து தங்கள் மேலான யோசனையைக் கூறினால், இதுபற்றி வீண் குழப்பங்களுக்கு இடமில்லாமற்போகும்.

0 0

இரண்டு வாரங்களுக்கு முன்னால கிழக்குப் பாகிஸ்தானைச்சேர்ந்த ஸில்ஹட் மாவட்டத்திலே 5000 பேர் அடங்கிய ஒரு கிராமத்தின் மீது மேற்குப் பாகிஸ்தான் இராணுவம் எப்படி பழிவாங்கும் நடவடிக்கைளெடுத்ததென்பதைப்பற்றி லண்டன் செய்திபொன்று தெரிவிக்கிறது. அங்கு நடந்த 'கொரில்லா' சம்பவத்தைத் தொடர்ந்தே இப்பழிவாங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாம்.

சென்ற ஆகஸ்ட் மாதம் 31-ம் திகதி காலை பாக். இராணுவப்படையினர் அக் கிராமத்துக்கு வந்து அங்குள்ள பிரமுகர்களை பள்ளிக்கூடத்தில் வந்து கூடும்படியும் ஒரு 'சமாதானக் கமிட்டி'யை நிறுவவேண்டுமென்றும் கேட்டனர்.

கிராம வாசிகள் இதை உண்மையென்று நம்பி, பள்ளிக்கூடத்துக்கு வந்தனர். வயோதிபர்களை மண்டபத்தில் காத்திருக்கும்படி சொல்லிவிட்டு, தேகதிடமுள்ளவர்களை ஒரு பொது அறைக்கு 'விசாரணை'க்காக அழைத்துச் சென்றனர். அவர்களில் யாரும் திரும்பி வரவில்லை.

அவர்களின் கைகளைப் பின்புறமாகக்கட்டி, பின்புற வாயில்வழியே ஒருகுளத்தங்கரைக்குக் கொண்டுசென்று சுட்டுத்தள்ளினர். சுமார் 50 பேர் இவ்விதம் கொல்லப்பட்டனர். அவர்கள் எவ்வளவோ கேட்டுக்கொண்டும் கல் மனங்கரையவில்லை.

பள்ளிக்கூட தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், டாக்டர், கிராம ஊழியர்கள், யூனியன் போர்ட் முன்னாள் மெம்பர்களில்இருவர்-இவர்களெல்லாம் இவ்விதம் மடிந்தார்கள். இவர்களில் ஒருவரைத் தவிர மற்றவர்களெல்லாரும் தெய்வபக்தியுள்ள முஸ்லீம்கள். அல்லாஹ்வின் பெயரைச்சொல்லிக்கொண்டே மாண்டுவிழ்ந்ததாக அச்செய்தி தெரிவிக்கிறது.

கொரில்லாச் சண்டைகள் அதிகரிக்க அதிகரிக்க இவ்வித பழிவாங்கும் நடவடிக்கைகளும் அதிகமாக நடைபெறலாம். இந்நிலையில் கிழக்குப் பாகிஸ்தானில் எவ்விதம் அமைதிஏற்படமுடியும்?

—பாஸ்கர்.

## போனால் போகட்டும் ...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக்கிவிட்டால் எதுதான் உபயோகப்படாது:

இன்று உலகிலுள்ள மூன்று பெண் பிரதமர்களும் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் தான். திருமதி கோல்டா மேயருக்கு வயது 70-க்கு மேலாகிவிட்டது.

**சுத்தமாக இருங்கள்**

முடிந்தவரை சுறுசுறுப்பாக இருங்கள். முடியாது. முடியாது என்று ஒய்ந்து விடாதீர்கள் சிறிது உற்சாகத்தை அதிகரித்துக் கொள்ளுங்கள். இயன்ற வரை சுத்தமாக இருங்கள். சுத்தம் சுகத்தைத்தான் தரும். 'டிப் டொப்' வரிசையில் சேர்ந்துவிட முடியா விட்டாலும் உடை விஷயத்தில் உங்களுடைய அளவுக்குத்தக்கதான உடையை அணியுங்கள். இல்லாவிட்டால் சதா மனக்குறை நம்மைக் குடைய ஆரம்பிக்கும். வீட்டிலிருந்து வெளிக்கிடும் பொழுது கண்ணாடியைப் பார்த்து சிரித்து விட்டுப் புறப்படுங்கள். இதே முகம் மாலை வரை நிலைக்கட்டும்.

தேர்தலில் ஒருகு வாக்குகளால் வெற்றி பெற்றாலும் வெற்றிதான். வெற்றி பெற்றுவிட்டால் இப்படி வெற்றி பெற்றவர் தமக்கு எதிராக வாக்களித்தவர்களைப் பற்றி ஒரு மதிப்பீடு நடத்தி கவலைப் பட்டுக் கொண்டிருப்பதில்லை. வெற்றிக் களிப்போடு தமது பணியைச் செய்ய தயாராகி விடுகிறார். இது போன்றுதான் நம்மைப் புறக்கணிப்பவர் சிலர் இருக்கிறார்கள் என்பதற்காக நாம் மனம் சலிப்படைந்து நமது வாழ்வின் வெற்றிக்கான பயணத்தில் ஒய்ந்துவிடக் கூடாது.

உற்சாகமளிக்கக் கூடியவர்களை நாடி பயன் அளிக்கக் கூடிய விஷயங்கள் பற்றி மனம் விட்டுப் பேசுங்கள். மட்டம் தட்டக் கூடியவர்களை விட்டு விட்டு நல்ல திட்டம் தீட்டக் கூடியவர்களுடன் ஆலோசனை கலவுங்கள் ஆறுதலும் ஆக்கமான விளைவும் கிடைக்கும்.

**அழாதீர்கள்**

பஸ் நிலையத்தில் நிற்கிறீர்கள் ஒரு பஸ் உங்களை ஏற்றாமலேயே போய் விடுகிறது இதற்காக 'ஐயோ என் தலைவிதி இப்படித்தான்' என்று அழாதீர்கள். அடுத்த பஸ் எப்பொழுது வரும் என்று பாருங்கள் இதற்குள் நீங்கள் செய்ய வேண்டிய வேலையை நன்கு நிதானப் படுத்துங்கள்

கவலைக்கென ஒரு கணக்கெடுப்பு நடத்துவது வீண் வேலை. இதனால் உங்கள் அருமையான நேரந்தான் வீணாகும்.

'அன்பமே இயற்கை எனும் சொல்லை மறந்திடுவோம். இன்பமேவேண்டி நிற்போம் நம்பினார் கெடுவதில்லை. இது பாரதியின் தீர்ப்பு.


**கொப்பரா விற்பனையாளர்களுக்கு**

**அறிவித்தல்**

நாம் இப்பொழுது கொப்பரா கொள்வனவு செய்து வருகின்றோம். ஆகவே கொப்பரா வைத்திருப்பவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

சி. எஸ். கே. மில்ஸ்.

யாழ்ப்பாணம்.



**நவராத்திரி**

**சரஸ்வதி பூஜைக்கு**

தேவையான

- விளவுகூடம்
- அபிஷேக திரவியங்கள்
- அபிஷேகச் சந்தனம் (உடன் யந்திரத்தினால் அரைக்கப்பட்டது)
- அபிஷேகக் குங்குமம்
- அபிஷேக விபூதி
- அபிஷேக வாசனைதிகள்
- கற்பூரம், சாம்பிராணி, ஊதுபத்திகள்
- நைவேத்தியப் பொருட்கள் (அவல், கற்கண்டு, சர்க்கரை முதலியன)

மற்றும்

சகல சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

கடந்த 38 ஆண்டுகளாக நற்சேவை புரிந்து நற்பெயர் பெற்றவர்கள்

**எஸ். சுப்பிரமணியம்**

**அன் கொம்பனி**

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த சில்லறை வியாபாரிகளும்)

53, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 541 Residence: 7068

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11. போன்: 35825



**கேள்வி விளம்பரம்**

**சுண்டிக்குளிப் பெண்கள் கல்லூரி**

விஞ்ஞான கூடக் கட்டிடம் அமைப்பதற்குக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்கள் 11-10-71 நண்பகலுக்குமுன் கல்லூரி அதிபர் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரமும், கட்டட விபரமும் 5-10-71 மாலை 4 மணி வரையும் கல்லூரி அதிபரின் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அதிபர்,
சுண்டிக்குளிப் பெண்கள் கல்லூரி.
3042 யாழ்ப்பாணம்.



**மரவள்ளிக்கிழங்கு**

ஒரு தொன் ரூபா 200.00 வீதம் கொள்வனவு செய்துவருகிறோம்.

தொடர்பு கொள்ளவும்:

**ஸ்ரீலங்கா டப்பியோகா புறடக்ஸ்**

C/O சுந்தரம் பிறதர்ஸ்;

73, மின்சாரநிலைய வீதி. யாழ்ப்பாணம்.

சிறுகதை

# இல்லறப் பரீட்சை

ச. ம. அச்சுதன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

சிவநேசனை அவளுக்கு மாப்பிள்ளையாகக் கொண்டு வந்து நிறுத்தினர் ஆசிரியர். பையன் நல்ல குணமானவன்; இலங்கை வங்கியில் உத்தியோகம்; கை நிறையச் சம்பளம். ஆனல் 'சீதனம் குறுக்கே நின்றது. தன் மகனின் விலை பத்தாயிரம் என்று ஒற்றைக் காலில் நின்ருர் சிவநேசனின் தந்தை நடராஜர்.

பத்தாயிரத்திற்கு என்ன செய்வது என்று சிவலிங்கன் நினைத்தபோது, அவனையே தம் மகள் மங்கையர்க்கரசிக்கு விலைபேசினர் சிங்கப்பூர் பென்சனியர் பெரியசாமி. தாமோதரம்பிள்ளை. ஆசிரியர் கக்கவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தார். காரணம் வேறொன்றுமில்லை. அவருக்குக்கீழ் அவள் மாணவியாக படித்த காலத்தில் அவள் காரணமாக சில மாணவர்கள் தபால் இலாக்காவுக்கு நட்டம் வைத்ததும் அதற்கு அவள் உடந்தையாக இருந்ததுந்தான் தபால் தலையோ உறையோ இல்லாமல் புத்தகத்திற்குள் வைத்து அவள் செய்த தபால் பட்டுவாடாவை அவர் ஒருமுறை கையும்மெய்யுமாகப் பிடித்துக் கண்டித்ததுமுண்டு." அந்த மங்கையர்க்கரசியா சிவலிங்கனுக்கு மனைவியாக வருவது? சிறுவயதிலதான் கஷ்டப்பட்டானென்ருல் இல்லறத்திலுமா அவனுக்குச் சோதனை? என்று தனக்குத் தானே கேட்டு மறுகினர் ஆசிரியர். ஆனல் யாரையும் கேட்காமல் விதி தன் வேலையைக் காட்டி விட்டது. பெரியசாமியின் பத்தாயிரம் சிவலிங்கனுக்கூடாக நடராஜர்க்கு மாறியது? சிவநேசன் - சுமதி சிவலிங்கன்- மங்கையர்க்கரசி சோடிகளின் திருமணம் செல்வச்சந்நிதியில் ஆடம்பரமின்றி நடந்தேறி இத்தனையோடு எட்டுவருடங்களாகிவிட்டன. இந்த எட்டு வருடங்களிலும் எத்தனை பரீட்சைகள் சிவலிங்கன் வாழ்க்கையில். உத்தியோகத்தில் எத்தனையோ பரீட்சைகளில் வாகைசூடி இன்று ஒரு 'எக்கவுண்டன்' ஆக உயர்ந்திருக்கிருன். ஆனல் இல்லறத்தில் அவனுக்கு ஏற்பட்ட பரீட்சையில் ... ... ?

0 0 0

இதற்குமேல் சிவலிங்கனின் பூர்வோத்திரத்தைப் பற்றி அளப்பதில் லாபமில்லை. அதோ! அவனே வந்துவிட்டானே! 'சுள்' என்ற தைத்த சூரியஒளிக்குப் பாதுகாப்பாக 'டெய்லி மிரரை'ப் பிடித்தவாறு மறுகையில் ஒரு சூட்கேசுடன் சந்தியில் வருவது வேறுயாருமில்லை: சிவலிங்கனேதான்.

ஆசிரியர் வீட்டுக்குள் வந்ததும் திரும்பி கேட்டினூடாக ஒருதரம் தன் பார்வையை ஓடவிட்டான் சிவலிங்கன். 'ஈசிச்செயரி'ல் படுத்திருந்த ஆசிரியரை 'ஈழநாடு' மேலே விழுந்து பார்த்துக்கொண்டிருக்க, பூரணம்மாமி முன்தானையை விரித்து அவரருகில் அயர்ந்து கொண்டிருந்தாள்.

கொழும்பிலிருந்து அவன் வரும்போதெல்லாம் ஆசிரியரோ அல்லது பூரணம் மாமியையோ கண்டு நலம் விசாரித்து, கொழும்பில் 'பாமிலி'யுடன் இருக்கும் அவர்கள் ஒரே மகனைப்பற்றிய சுகசேதிகளைச் சொல்லியபின்தான் அவன் தன் வீட்டிற்கு செல்வதுண்டு.

இன்று அதுசாத்தியமில்லை என்று உணர்ந்தவனாக ஒழுங்கைக்குள் திரும்பி நடந்தான் அவன்.

வீட்டு வெளிவிறாந்தையில் நாற்காலியில் இருந்தவாறு 'குமுதம் வார இதழில் ஆழ்ந்திருந்த மங்கையர்க்கரசி, சிவலிங்கன் கேட்டைத் திறந்து வருவதைக் கண்டதும் சட்டென்று எழுந்து நின்ருள்.

'நீங்கள் காலையிலை வருவியள் எண்டு எதிர்பார்த்தன். ஏன் இவ்வளவு நேரம்?'

சூட்கேசை அவள் கையில் கொடுத்துவிட்டு ஷேட்டைக் கழற்றியவாறு.

'குருநாகலைக்கு தங்கச்சி வீட்டை போயிருக்கலாம் என்று நேற்று 'ஈவினிங்' யாழ்தேவியில் ஏறினனுன். அவளும் சிவநேசனும் விட்டார்களே? நின்று இன்று காலை போகலாம் என்று மறிச்சுப்போட்டுதுகள்' என்ருன் அவன்.

அப்படித்தான் நானும் நினைத்தன். சுமதியும் ரஞ்சியும் எப்படி?'

'அந்த முஸ்பாத்தியைக் கேளன், நான் ரயிலாலை இறங்கி சுமதி வீட்டை போய்க்கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு 'ஸ்கூட்டர்' என்னை உரசுங்கொண்டுவந்து நின்றது. நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தால் ...'

'பார்த்தால்?'

'மாமா பயந்துபோனீர்' என்று நம்ம ரஞ்சிக்குட்டி ஸ்கூட்டரில் நின்றுகொண்டு கைதட்டிச் சிரித்துக்கொண்டிருந்தாள். சிவநேசனுக்குப் பின்னுல் நம்ம சுமதி!'

'என்ன! ஸ்கூட்டர் வாங்கியிருக்கினமே?

'எனக்கு காயிதத்திலைகூட உங்க தங்கை எழுதவில்லையே!'

'எனக்கே நேற்றுத்தான் தெரியும்'.

'என்ன இருந்தாலும் உங்க தங்கை சுமதி நல்ல அதிஷ்டசாலி.'

'இல்லை: சிவநேசன்தான் அதிஷ்டசாலி. என் தங்கையை முடித்தவன்தான் அவனுக்குப் பதவி உயர்வும் கிடைத்திருக்கிறது'

அப்படி என்டால் இப்படியும் சொல்லலாம்தானே?'

'எப்படி?'

'என் பலனுல்தான் நீங்களும் 'எக்கவுண்டன்' ஆனது எண்டு.'

'இப்ப இல்லையெண்டு யார் சொன்னது?' என்று கூறியவாறு காலுறையைக் கழற்றியவன், 'அதுசரி 'எங்கே குழந்தைகளைக் காணவில்லை?' - என்று அவளைப் பார்த்துக் கேட்டான்.

'பள்ளிக்கூடத்திலை ஏதோ விழாவாம். அதுக்கு இதுகளுக்கும் ஏதோ 'டான்ஸ்' பழக்கமாம், நாலு மணிக்குத்தான் வருவிகள். அப்புவும் சன்னதிக்குப் போனவரா இன்னும் வரவில்லை' - என்று பதில் கூறிய மங்கை, 'கை காலை கழுவிக்கொண்டு வாருங்க, நான் சோறு போட்டுக்கொண்டு வாறன்' என்று கூறி சமையலறைப் பக்கம் சென்ருள்.

அவள் சாப்பாட்டு வட்டிலுடன் வரும்போதும் அவன் அங்கேயே இருப்பதைக் கண்டு, 'என்ன கைகால் அலம்பிக்கொண்டு வரச் சொன்ஞல் இங்கேயே நிற்கிறியள். மணி மூன்ருச்சு இன்னும் சாப்பிடாமல்...' என்று பொய்க் கோபத்துடன் அவனை விரட்டினுள் மங்கை.

'ஆறுதலாகச் சாப்பிடலாம், முதலிலசாப்பாட்டை மேசைமேல் வைத்துவிட்டு இங்கே வா!' என்று கையைப் பின்னுக்கு வைத்துக்கொண்டு அவளை அழைத்தான். அவள் அவன் முன் வந்து நின்றபோது அவளுக்குப்பிடித்தமான நிறத்தில் ஒரு நைலெக்ஸ் புடவையை அவளது கைக்குள் திணித்தான். அவள் உள்ளம் ஒரு கணம் துள்ளியது ஏதோ உண்மைதான். என்றாலும் அவள் அதை வெளிக்காட்டாமல், 'இப்பஏன் எனக்குச் சேலை எடுத்தனியள்? இருக்கிற சேலையள் காணுதே?'

"இல்லை மங்கை, முந்தநாள் 'கோல்' ரோட்டில், போய்க்கொண்டிருந்த போது ஒரு கடையிலை இச்சேலை சோகேசில் இருந்தது. உனக்குப் பிடித்த நிறம், எனக்கும் நல்லாய்ப்பிடிச்சுக் கொண்டது, கையில் காசும் இருந்தது உடனே எடுத்து விட்டன்' - தாயைக் கேளாமல் மிட்டாய் வாங்கிய சிறுவனைப்போல் அவளைப் பார்த்துக் கூறினன் அவன். அவன் தன்மீது வைத்திருக்கும் அன்பின் தன்மையை எண்ணி ஒருகணம் உருகியே விட்டாள் அவள்.

"சரி போய் கைகாலைக் கழுவிக்கொண்டு வாருங்க சாப்பிட.'

'மாட்டன்!'

'மாட்டன் ஏன்?'

'நீ இதை இப்பவே கட்டிக்கொண்டு ஒருக்கா எனக்கு முன்னுல் வந்து நிற்கவேணும். அப்பதான் போவன்.'

'நல்ல ஆசைதான். அப்பு வந்துவிடுவார்; அதெல்லாம் பிறகு.'

'முடியாது! இந்தப்புடவையில் உன்னுடைய கோலத்தைப் பார்க்க வேணும் போல் இருக்கு. நீ கட்டினுல்தான் நான் இன்று சாப்பிடுவன்.'

'நல்ல குழந்தைப்பிள்ளைப் பிடிவாதம்' என்று கூறியவள் மனதிற்குள் சிரித்தவண்ணம் சேலையை எடுத்துக்கொண்டு ஸ்கிரீனுக்குப் பின்னுல் சென்ருள்.

அவள் அதை உடுத்துக்கொண்டு வந்து நின்றபோது அவன் தன்னையே மறந்து அவளைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

'என்ன அப்படிப் பார்க்கிறியள்?'

'ஏன், பார்க்கக்கூடாதே?' - என்று கேட்ட அவன் எழுந்து சென்று அவள் முகத்தைத் தன் கரங்களில் ஏந்தி, 'இல்லை ... இப்படி ஒரு அழகுச் சிலை எனக்கு மனைவியாக வாய்த்திருக்கிறுளே என்பதை எண்ணும்போது எனக்கு எவ்வளவு பெருமையாக இருக்கிறது தெரியுமா?' என்று கனிவுடன் அன்பு குழையக் கூறினன்.

மங்கைக்கு தொண்டைக்குள் ஏதோ வந்து 'பக்' என்று அடைத்துக்கொண்டது; அவளால் பேசமுடியவில்லை. கண்களில் 'குபுக்' என்று கண்ணீர் முட்டியது; அவளால் அவனைப் பார்க்கவும் முடியவில்லை. அதை மறைப்பதற்கு அவன் மார்பில் தலையைப் புதைத்துக்கொண்டவள் சட்டென்று தலையை எதிர்ப்பக்கம் திருப்பிக்கொண்டாள்; தன்னை ஒருவாறு சுதாரித்துக்கொண்டாள்.

'யாரும் கேட்டால் சிரிக்கப்போகுதுகள்; இரண்டு குழந்தைகளைப் பெற்ற பிறகும் புதுச்சோடி மாதிரி... போய் முகத்தைக் கழுவிக்கொண்டு வாருங்க' என்று கூறிய மங்கை சேலை களைவதற்கு மறுபடியும் ஸ்கிரீனுக்குப் பின்னுல் சென்ருள்.

சிவலிங்கனும் ஒற்றுடையைஎடுத்துக்கொண்டு கிணற்றடிக்குச் சென்ருன். அவன் மனம் நிர்ச்சலனமாகவிருந்தது. அவள் மனமோ வெனில் ...!

மாலை மயங்கி மனதை மயக்கும் நேரம். புதுமணப் பெண்ணெருத்தி மங்கள நீராடி தென்றலில் தலை உலரவிட்டு நிற்பதுபோல் மார்கழிமாதச் செழிப்பில் வாழ்நங்கையும் பச்சைப் பசேல் என்று கண்ணுக்கு விருந்தாகத்தான் இருந்தாள். அந்த அந்தி மயக்கின் சோபையில் மனதை இழந்தவஞக விநாயகர் கோயிலை எதிர்த்தாற்போலிருந்த கேணிப் படியில் அமர்ந்திருந்தான் சிவலிங்கன். அவன் இருந்த படிக்கு மேற்படியில் அமர்ந்திருந்தார் ஆசிரியர். சிவலிங்கன் லீவில் வரும்போதெல்லாம் அவனும் ஆசிரியருமாகமாலை வேளையில் பொழுதுபோக்குக்காக அக்கேணிப்படியில்தான் அமர்ந்து அளவளாவுவது வழக்கம்.

அன்றுபகல் நிகழ்ந்த இனிய நிகழ்ச்சியுடன் இந்த மாலைக் காட்சியையும் இணைத்துப் பார்த்தபோது சிவலிங்கனுக்கு வெண்முகிலில் படுத்து மிதப்பதுபோன்ற ஓர் இதமான உணர்வு ஏற்பட்டது. ஆனல் ஆசிரியரோ இவற்றிற்கெல்லாம் வேறுபட்ட ஓர் உணர்ச்சிப் போராட்டத்தில் சிக்கியிருந்தார் என்பது அவர் முகபாவத்திலிருந்தும் கால் கட்டைவிரலால் படியில் அவர் கோட்டுக்கொண்டிருந்த கோலத்திலிருந்தும் புலனாகியது.

'சொல்வதா, வேண்டாமா?' என்ற பிரச்னையைக் கடந்து. 'சொல்லியே தீர்வது என்ற முடிவுக்கு வந்த அவர் 'எப்படிச் சொல்வது?' என்ற சிக்கலில் சுழன்றுகொண்டிருந்தார்.

"என்ன மாஸ்டர், நானும் அந்தநேரம்கூடப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் வழக்கம்போல் கலகலப்பாக இல்லையே! மாமியோடை ஏதேனும் சண்டையோ?"

'இந்த வயதிலை எங்களுக்குள்ளே ஏனப்பா சண்டை வரப்போகுது?'

'பின்னை ஏன் ஒருமாதிரியாக இருக்கிறியள்?'

ஒன்றுமில்லை சிவம்; இந்தக்காலத்துப் பெண்களைப் பற்றி நினைத்துப் பார்த்தால் மனதிற்கு ரொம்பவும் வேதனையாக இருக்கிறது."

"அதென்ன அப்படி இருந்தாப்போலை ஒருபுது ஆராய்ச்சியில் இறங்கிவிட்டியள்?"

"ஒன்றுமில்லையப்பா! இந்தக்காலத்துப் பொடிச்சியள் பவுடர், கிறீம், லிப்ஸ்டிக்குக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைக்கூட நன்றி, விசுவாசம், கற்பு போன்றவைக்குக் கொடுப்பதாகத் தெரியவில்லை. நான் பகிடிக்குச் சொல்லவில்லை; வருங்காலத்தில் இந்தப் பொடிச்சியள் கற்பைத்தேடி கடைகடையாக ஏறிஇறங்கினுலும் ஆச்சரியப்படுவதற்கில்லை."

ஏதோ பெரிதாக ஹாஸ்யம் ஒன்றைக் கேட்டுவிட்டவன் போல் வாய்விட்டுப் பலமாகச் சிரித்தான் சிவலிங்கன். அது ஹாஸ்யமோ இல்லையோ, அப்படிச் சிரித்து வைத்தால் ஆசிரியர் உற்சாகமாகப் பல விஷயங்களைப் பற்றியும் பேசஆரம்பிப்பார் என்பது அவன் அனுபவ ரீதியாகக் கண்ட உண்மை.

"தம்பி!" — ஆசிரியர் தயக்கத்துடன் அவன் சிரிப்பை இடையே வெட்டினர். அவர் மேலும் நேரம் கடத்த விரும்பவில்லை; நேரே விஷயத்திற்கு வரவிரும்பினர்.

"நான் ஒரு விஷயம் உனக்குச்சொல்லலாம் என்று பார்க்கிறன். அதை உனக்குச் சொல்லவும் சங்கடமாக இருக்கிறது; சொல்லாமல் விடவும் மனம் கேட்குதில்லை..." — தயக்கத்துடன் கூறிய அவர் தம் தலையை நிமிர்த்தி அவன் முகத்தைப் பார்த்தார்.

"ஏன் தயங்கிறீங்க? அப்படி என்ன விஷயம்?"

'ஒன்றுமில்லை' நான் சொல்லப்போகிற விஷயம் உனக்கு அதிர்ச்சியைத்தரக்கூடும். ஆனல் அதைக்கேட்டு எவ்விதமான அவசர முடிவுக்கும் வந்துவிடாதே! எனக்குத் தெரியும் நீ உணர்ச்சி வசப்பட்டு ஏதேனும் விபரீதமாக நடந்துவிடமாட்டாய் என்பது. உணர்ச்சியிலும் பார்க்க அறிவுக்கு முதலிடம்கொடுப்பவன் நீ. அந்தத் துணிவில் தான் இதை நான் உன்னிடம் கூறுகிறேன்."

அவர் குரலில் திடீரென்று ஏற்பட்ட படபடப்பையும் ஆவேசத்தையும் கண்ட அவனும் அவருக்குத் தீர்க்கமாகக் கூறினன்.

"எவ்வித அசம்பாவிதமும் நடந்துவிடாது பயப்படாமல் சொல்லுங்கமாஸ்டர்!"

"தம்பி சிவம்! இந்த விஷயத்தைப் பற்றி நான் உனக்குச் சொல்வது சரியோ பிழையோ எனக்குத் தெரியாது. ஆனல் இதை என்னுல் உனக்குச் சொல்லாமல் இருக்கமுடியவில்லை." என்று அவனைப் பார்த்துக்கூறிய அவர் சட்டென்று தம் தலையை கோயில் பக்கம் திருப்பிக் கொண்டுகூறினர்.

(தொடரும்)

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்;
போன்: 330

சர்வதேச ஆட்சிமன்ற பிரதிநிதிகள் சங்கத்தின் குறிக்கோள் சர்வதேச சமாதானத்துக்காக உழைப்பதேயாகும். சர்வதேசபிரச்னைகள் பகைமை ஆகியன தோன்றும் இடங்களில் அவை எந்த நேரத்தில் எந்த விதத்தில் ஏற்பட்டாலும் இச்சங்கம் அங்கெல்லாம் உலக சமாதானத்தை நிறுவுவதற்குப் பெரும் பொறுப்புணர்ச்சியோடு தலையிட்டு முயற்சித்துள்ளது. உலக சமாதானத்தைக் குறிக்கோளாகக் கொண்ட இச்சங்கம் இக்குறிக்கோளின் அடிப்படையிலேயே உலகப்




சீரகம் அனைவருக்கும் தெரிந்த பதார்த்தம், நாம் அன்றாடம் உபயோகிக்கும் அடுக்களைப் பொருட்களில் சீரகம் மகத்தானது. மருந்துப் பொருளாகவும் இதுபயன்படுத்தப்படுகிறது. நல்ல மணம் இதற்கு உண்டு. நாவிற்கு சுவை பயப்பது. இவை மாத்திரமன்றி சீரணத்திற்கு வழி வகுப்பது. இக்காரணத்தைக் கொண்டு இதற்கு போசன குடாரி என்னும் பெயர் வழங்கப்படுகின்றது.

நம்நாட்டில் தயாரிக்கப்படும் சரக்குத்தண்ணிப் பத்தியக்கறிக்கு சீரகம் பெரிதும் பயன்படுவதுண்டு. பண்டைய தமிழ்ப் புலவர்களின் பாடல்களிலும் இதன் மகிமை பற்றிக் கூறப்படுகிறது.

**வகை**

சீரகம் கருஞ்சீரகம், பெருஞ்சீரகம், காட்டுச்சீரகம், பிளப்புச் சீரகம் எனப்பல வகைப்படினும் சீரகத்திற்கே நற்சீரகம் என்னும் சிறப்புப் பெயர் வழங்கப்படுகின்றது.

**ஆற்றல்**

இது ஒரு வகைச்செடியின் வித்தாகும். வாயில் நெற்பொரி, சுக்கு, மல்லி இவைகளைச் சமஅளவாக எடுத்து கஷாயமிட்டுக் குடிப்பது நற்பலனைத் தரும்.

சீரகம், மல்லி, வால்மிளகு, ஆவரசம் பஞ்சாங்கம், ஒரிதழ்தாமரை இவைகளை சம அளவாக கொண்டு கஷாயம் செய்து பருகுவதால் சலப்பை அழற்சி, சலக்கடுப்பு, சலதாரைப்புண் நிவாரணமாகும்.

சீரகம் வேண்டிய அளவு எடுத்து ஒரு மண்சட்டியில் போட்டு மேற்படி சீரகம் அமிழும் படியாக எலுமிச்சம்புளி விட்டு வெயிலில் வைத்துலர்த்தி எடுத்த சூரணத்தைதிரிகடிப்பிரமாணம் தினம் இரண்டுவேளை உணவுக்கு முன் வாயிலிட்டு வெந்நீர் குடித்து வர பித்தத் தலைச்சுற்றல், வாந்தி, அரோசகம், தேக எரிவு, அக்னிமந்தம், புளியேப்பம், நெஞ்செரிவு நீங்கும். இம்மருந்தை சம்பீரசீரகம் என்பர். (சம்பீரம்-எலுமிச்சை).

சீரகம், மிளகு, வகைக்குப் பலம் 3. இஞ்சி, இந்துப்பு வகைக்குப்பலம் 2 சுக்கு, பெருங்காயம் வகைக்கும் பலம் 1. இவ

# சீரக மகத்துவம்

விட்டுச் சுவைத்தால் காரமும், இனிப்பும் தென்படும். தங்கமான தன்மையுள்ளது. சூடும் குளிரும் மற்றதான சமதன்மை என்பாருமுளர். இதுசெரிமானத்தின் பின்பு இனிப்புச் சுவையாக மாறும் பண்புள்ளது. இத்தகைய தன்மையினால் தேகத்தை நெகிழாது காக்கும் வன்மை படைத்துள்ளது. உள் அழற்சியை ஆற்றுவதிலும் உயர்வானது. வயிற்று வாய்வை அகற்றக் கூடியதும் உடலுக்கு வேண்டிய உஷ்ணத்தைக் கொடுக்கக்கூடியதும் பசியைத் தூண்டத்தக்கதுவும் குடலிலுள்ள திரவ பதார்த்தங்களுக்கு வரட்சியை உண்டாக்கி மலப்போக்குகளை நிறுத்தக் கூடியதுமான செயலாற்றலை உடையது.

பொதுவாக வயிற்றுக் குழப்பம், அஜீரணம், வயிற்றுப்புசம், உஷ்ணதிக்கம் இவைகளுக்கு சீரகம், மல்லி இவைகளிரண்டையும் அவித்துக் குடிப்பது வீட்டு வழக்கம்.

**நல் மருந்து**

வாய் அரோசகம், வாந்தி, வயிற்றைமுறுக்கி வலித்தல் ஆகியவைகளுக்கு சீரகம். ஏலம். திறை சூரணித்து எலுமிச்சம்பழச் சாற்றால் இரண்டு சாமம் அரைத்து சுண்டைக்காயளவு குளிகை செய்து தினம் காலை மாலை ஒரு குளிகை வீதம் வெந்நீருடன் உட்கொண்டுவர மந்தாக்கினி, வயிற்றுவலி, சீரணக்குழப்பம் குன்மவாயு, பித்தவாயு, சூதகவாயு இவை குணமாகும்.

சீரகம், மிளகு, திற்பலி, இந்துப்பு வகைக்குப் பலம் 1. பெருங்காயம் பலம் அரைக்கால், கறிவேப்பிலைத்தூள் பலம் 1/2. சேர்த்திடித்த சூரணம் ஒருவராகனெடை வீதம் காலை மாலை உபயோகிக்கலாம். இதனால் வயிற்றில் வாயு. அஜீரணம், குன்மம், இவை குணமாகும். மேற்படி சூரணத்தை சாதத்துடன் நெய் விட்டுப்பிசைந்து உட்கொள்ளுவதால் அபான வாயுக் கோளாறு நீங்கும்.

சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, திற்பலி, மிளகு, இந்துப்பு, ஓமம், பெருங்காயம் இவைகளை சமனெடை இடித்த சூரணத்தை திரிகடிப் பிரமாணம் பாவித்து வர அஜீரணம், பொருமல், வாய்வுக் கோளாறு குணமாகும். பசியை விருத்தி செய்யும்.

**சீரகப் பண்பு**

"சீரகத் குணத்தைக் கேளு திக்கர மரோசி வாந்தி
காரமார் வெட்டை மூலக்கடுப்பொடு தாகம் வாயு
வாரமின் மேக பித்த தலைவலி மடிவு மற்றும்
திரும்பண் குளிர்த் தேகந் திரமுறு வாசமுண்டாம்"

— வ. சிவப்பிரகாசம் —

(சித்த ஆயுள் வேத வைத்தியர்)

# பாரிஸில்

# வி. என். பேசுகிறார்



பிரச்சினைகள் பலவற்றுக்கும் தீர்வுகாணவும் அவைபற்றி ஆராயவும் செயல்படும்;

**வியட்நாம்**

**மத்திய கிழக்கு...**

வியட்னும் சம்பவங்கள் உலக சமாதானத்துக்கு ஊறுவிளைந்த லட்சக்கணக்கான மக்களை ஆற்றொணாத் துன்பத்துக்கும் கவலைக்கும் உள்ளாக்கியுள்ளன. இச்சம்பவங்களினால் நேரடித்தொடர்பில்லாத எண்ணற்ற மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மத்திய கிழக்குக்கொந்தளிப்பாலும் இதே நிலைமையேற்பட்டுள்ளது. இதனால் மத்தியகிழக்கிலுள்ள பல்வேறு நாடுகளின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதை விப்பதோ அல்லது விமர்சிப்பதோ வேண்டியதில்லை. அது அவசியமற்றதும் புத்திசாலித்தனமற்றதொருசெயலுமாகும். இதே வேளையில் இதைப் பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரம்எனக் கருதக்கூடாது. இவ்வாறு கருதிக்கொண்டின்றி இப்பிரச்னைக்கு உடனடித் தீர்வு காணாது இருந்தோமானால் இதன் விளைவு ஆசிய பிராந்தியத்தின் அமைதிக்கே பங்கம் விளைவித்துவிடும். நான் முன்னர் கூறியது போன்று இன்னும் காலம் கடந்துவிடவில்லை. காலங்கடந்தாது இப்பிரச்னைக்கு நாம் உடனடித்தீர்வு காணவேண்டும். அல்லாவிடில் பின்னர் தீர்ப்பதென்பது இயலாத காரியமாகும்.

பாகிஸ்தான் பிரதமராகி விடுப்பார்.

அங்கத்துவ நிறுவனங்களை நிறுவுவதும் விருத்திசெய்வதுமே இச்சங்கத்தின்நோக்கமாகவிருக்கையில் மக்களின் பெரும்பான்மை வாக்கைப்பெற்று அவர்களை ஆள உரிமையுள்ள ஒருவரின்மேல் நடைபெறும் விசாரணையைத் தலையிட்டு தடுக்காவிடில்என்ன பிரயோசனம்.

## 'உடையாலும் உணவாலும் வங்க அகதிகள் பிரச்னை தீராது;

## அது அரசியல் பிரச்னை. அரசியல் தீர்வு வேண்டும்'

நாம் கண்கூடாகக் காணலாம்.

**உலகம்**

**போதியளவு**

**அனுபவித்துவிட்டது**

உலகம் இதுவரை காலமும் போர்களையும் அதனால் ஏற்பட்ட கொடூர விளைவுகளையும் போதிய அளவு அனுபவித்துள்ளது. இதனால் எண்ணற்றஉயிர்களையும் அளவிடமுடியாச் சொத்தையும் இழந்து நிற்கிறது. உலக நிறுவனமாகிய இச்சங்கம் வியட்னும்,மத்திய கிழக்குப் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காண உழைத்துவருகிறது.

இந்த அடிப்படையில் நாம் வங்காள சம்பவங்களைக் கவனிக்காது, அவை பற்றி நன்கு ஆராய்ந்து அப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணாது விடுவோமானால் உலக சமுதாயத்துக்கு செய்யவேண்டியகடமையில் இருந்து தவறியவர்களாவோம்.

**வங்க நிலைமை**

அமைதியான தீர்வு ஒன்றைக்காண முடியாது அவ்வுக்கு கிழக்குவங்க நிலைமை மோசமாகிவிடவில்லை ஆனால் நாம் உடனடியாகத்தலையிட்டுஅமைதியான தீர்வொன்றைக்காணாது இந்தநிலைமையைத் தொடர்ந்து விட்டுவிடுவோமானால் இப்பொழுது உள்நாட்டுப்போர் எனக்கூறும் இவ்வங்க விவகாரம் வியட்னும், மத்திய கிழக்கு நிலைமைகளிலும் பார்க்க அபாயமான நிலை ஒன்றைஉண்டுபண்ணிவிடும்.

**அரசியல் பிரச்னை**

85 லட்சம் வங்க அகதிகள் தற்போது இந்தியாவை சரணடைந்துள்ளனர். இந்த அகதிகள் பிரச்னை வெறும் சமூக-பொருளாதாரப் பிரச்னையல்ல. உணவு, உடை, உறையுள் முதலியவற்றை உலகநாடுகள் வழங்குவதால் மட்டும் இப்பிரச்னையைத் தீர்த்துவிடமுடியாது.

இந்தவேளையில் உலக நிறுவனமாகிய இச்சங்கம் கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட சம்பவங்களைக் குறித்து கண்டனம் தெரி

**முஜிபுரை**

**விடுவிக்கவேண்டும்**

வங்கப்பிரச்னையைப் போக்கி சமாதானத் தீர்வு காணுவதற்காக நிலைமை வைச்சுமுகமாக்கவேண்டுமாயின் ஒரு பிரதானமான வேலையை முதல் நடவடிக்கையாக உலக நிறுவனமாகிய இச்சங்கம் மேற்கொள்ள வேண்டும். அதாவது உடனடியாக இச்சங்கம், கிழக்கு வங்க மக்களின் தலைவரான முஜிபுரைவிடுவிக்கத்தலையிட வேண்டும். 1970-ம் ஆண்டு நடைபெற்ற பாகிஸ்தான் தேர்தலில் இராணுவ ஆட்சியிலிருந்து அதிகாரம் மாற்றப்பட்டிருந்தால் மக்களின் பெரும்பான்மைப் பலத்தைப்பெற்ற முஜிபுர் ஜனநாயகம், நாகரீகம், நீதி என்ற அடிப்படையில் இலட்சியமாக உழைக்கும் இந்த உலக நிறுவனத்தை, நான் ஒவ்வொரு அங்கத்தவரையும் பாகிஸ்தானின் ஆட்சியில் தலையிட்டு முஜிபுர் ரஹ்மானை விடுதலைசெய்விக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நடவடிக்கையை நாம் எடுக்காதுநிலைமையை இப்படியே விட்டுவிடுவோமானால்இதன் பின்னர் இப்பகுதியையே விழுங்கத்தக்க வகையில் எழும் போர்ப்பூகம்பத்தை தடுக்கவியலாது.

[பாரிஸில் நடைபெற்ற சர்வதேச ஆட்சிமன்ற பிரதிநிதிகள் சங்க மகாநாட்டில் நிகழ்த்திய உரையின் தொகுப்பு]

# பரமேஸ்வரா

பிரபோ! பரமேஸ்வரா!! சகலதரும பாவங்களிலும் நீ மலர்ந்திருக்கிறாய். எங்கும் எதிலும் உன் தெய்வமணம் வீசுகின்றது. அவ்யக்த தத்துவமான உன்னைத் தத்துவரீதியாக எங்ஙனம் நிரூபிக்க முடியும். சிந்தனைக்கதீதமான வனைச் சொற்களால் வர்ணிப்பதெப்படி? மனுதீதமான பரமசத்தியமே! உன்னுடைய வியாபக சக்தியை உணருகிறேன். மேலே உன் திருக்கரங்கள், கீழே உன் திருவடிகள். மத்தியில் பிரபஞ்சம். இப்பிரபஞ்சத்தில் இந்தச் சரீரம் தோன்றி உலாவுகின்றது. இடறிவீழ்ந்தாலும் உன் திருவடியில் வீழ்வேன். உயர்ந்தாலும் உன்திருக்கரத்தை அடைவேன். உமது திருவடியும் திருக்கரமும் பரம சுகமுடையது. ஆகையால் உயர்விலும், தாழ்விலும் பரமசுகமேதவிரத் துன்பமென்பதில்லை. உன் அருட்பொழிவில் தோய்ந்தபின் பயமென்பதில்லை. சங்கடமென்பதுமில்லை. எல்லாம் உன் ஒளிமயம். அருள்மயம். நன்மை தீமைகள் உன் திருவடிஸ்பரிச மகிமையால் ஒழிந்தன. எஞ்சியிருப்பதெல்லாம் ஆத்மசுகம். ஈடு இணையற்ற இந்த தெய்வ சுகத்திற்குமுன் இப்பிரபஞ்ச சுகமெல்லாம் எம்மாத்திரம்? சாட்சி மாத்திரமாய்நிற்கும் பரமானந்தமே! என்னை மறந்த நிலையில் உமது அருளை உணருகிறேன். உன்னைத்தவிர மற்றொன்றும் இல்லைஎன்பதை மீண்டும் மீண்டும் உணருகின்றேன். அந்த மெய்யுணர்விலே வாழும் வாழ்க்கைதான் வாழ்க்கை.

கருணைவள்ளலே! அஞ்ஞானத்தால் தனக்குத்தானே துன்பமிழைத்துக் கொண்டிருக்கும் மனித சமுதாயத்திற்கு ஜீவசக்திதரும் தெளிந்த மெய்யுணர்வைக் கொடுப்பாயாக. அவர்களைத் தெய்வ வாசனையுடையவர்களாக்குக. ஆத்ம சுகமென்ற அமிர்தத்தின் ஒருதுளியையென்றாலும் அவர்களுடைய நெஞ்சில் தெளிப்பாயாக.

— ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா

# புதிய பாதையில்

## வண்ணை கலைவாணர் நாடக மன்றம்



# தொழில் முறைக் கலைஞர்களாக இனி இயங்குவார்கள்

புதிய பாதையில் காலடி எடுத்துவைக்கப் போகிறார்கள்!

ஈழத்து நாடக உலகில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தப்போகிறார்கள் என்று கூடச் சொல்லலாம்.

கடந்த காலத்தில் வண்ணை கலைவாணர்நாடக மன்றம் நாடகக்கலைக்குச் செய்த சேவையையும், சாதனையையும் சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை.

கலையின்மீது உண்மையான பற்றுக்கொண்டவர்கள் அவர்கள் சாதித்தவையை உணர்வார்கள்; இதயபூர்வமாக வாழ்த்துவார்கள்!

தரமான ஒரு தமிழ் ரசிகர் கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல ஈழத்திலேயே உருவாக்கிய பெருமை அந்தமன்றத்தினருக்கே உரியது என்பதனை என்றால் சொல்லாமலுமிருக்க முடியாது.

நடந்து வந்த பாதையிலிருந்து சற்றேவிலகி புதுப்பாதை — தனித்துவமான பாதையொன்றை வகுத்து செயல்படப்போகும் வண்ணை, கலைவாணர் நாடகமன்றத்தினர் பணி என் நெஞ்சத்தில் இனிய நினைவு அலைகளாக முட்டி மோதுகிறது.

### திரும்பிப்பார்க்கிறேன்

அமெச்சூர் (பயில்முறை) நாடகமன்றமாக இதுகாலவரை இருந்துவந்த இந்த மன்றம், தொழில்முறை நாடகமன்றமாக இயங்கத் தீர்மானம் எடுத்துக் கொண்டு, அதற்கான நடவடிக்கைகளில் துடிதுடிப்புடன் ஈடுபட்டிருக்கும் இந்த சமயத்தில், அதன் கடந்தகால சாதனைகளை ரசிகர்களும் மறக்காமல் மனத்தில் பதித்துக்கொள்வது நல்லதென்று நினைக்கிறேன்.

0 பிரமாண்டமான தயாரிப்பான 'திப்புசுல்தானை' மேடையேற்றினார்கள்! பெரும்பொருட் செலவைப்பற்றி கவலைப்படாமல், நல்லதொரு நாடகத்தை ஈழத்துத் தமிழ் ரசிகர்களுக்குத் தரவேண்டுமென்ற உயர் நோக்குடன் படைத்து, வெற்றியும் கண்டார்கள். கலைக்கழகத்தின் பரிசையும் தட்டிக்கொண்டான் 'திப்பு சுல்தான்'

▪ 'வீரமைந்தனை'ப் பெற்றெடுத்தார்கள். அந்த வீரமைந்தனின் வெற்றியைப்பற்றி ரசிகர்கள் அவ்வளவு இலகுவாக மறந்து போயிருக்கமாட்டார்கள்.

▪ 'சரியா? தப்பா?' பார்த்தவர்களுக்குப் புரியும்- அந்த நேரத்தில் 'சக்கை' போடு போட்டதை!

▪ 'எதிரொலி'யின்புரட்சியைக்கண்டு எக்காளமிட்டவர்கள் நாடகத்துக்குக் கிடைத்தவரவேற்பை பார்த்துவாயடைத்துப் போனார்கள்.

▪ இத்தனையும் வண்ணை கலைவாணர் நாடகமன்றம் மேடையேற்றிய நாடகங்களுக்கு ஒவ்வொரு 'சபாஷ்'! பிரித்துப்பிரித்து அங்கம் அங்கமாகச் சொல்ல வேண்டியதில்லை. அத்தனையும் இதற்குள் அடக்கம்.

தொழில்முறை நாடக மன்றமாக்கி, புதுப்பாதை காணப்போகும் வண்ணை கலைவாணர் நாடகமன்றத்தின் தலைவரைச் சந்தித்துப் பேசினேன்! அவர்களின் எதிர்காலத்திட்டம் பற்றி புதிய தகவல்களைத் தெரிந்து கொள்ளவேமென்று அவரைத்தேடிப் போனேன்.

### அரசு பேசுகிறார்.

நாடகமென்றால் போதும், மணிக்கணக்காக பேசும் அந்த இனியவர்தான் நண்பர் எஸ். ரி. அரசு.

நாடறிந்த நல்ல நாடகக் கலைஞர் அவர்.

பாமா ராஜகோபால்

போலித்தனம் கிடையாது அவரிடம்!

மனதில் பட்டதைப் 'பட்பட்' டென்று சொல்லிவிடுவார்;

"நடிகர்கள் சோர்வடைந்து விட்டார்கள்; அவர்கள் குடும்பஸ்தர்களாகி ... தப் பொறுப்புகளாக் சலிப்புத்தட்டிப் போனவர்களாக இருக்கிறார்கள். இவைகளையெல்லாம் மனதிற்கொண்டே, தொழில் முறையாக இனி இயங்குவது என்ற முடிவுக்கு வந்தோம். தொழில்முறையாக இயங்குவதன் மூலம்தான் நடிகர்களிடமுள்ள சோர்வையும், சலிப்பையும் ஓட ஓடத்துரத்த முடியும்" என்று ஆரம்பித்தார் அரசு.

"நாடகக்கலையை தொழில் முறைநாடக மன்றத்தினால்தான் வளர்க்கமுடியும் ஆடிக்கொன்று, ஆவணிக்கொன்று என்று மேடையேற்றுவதால் நாடகக்கலை ... தொழில் முறை நாடகமன்றத்தினால் தான் தொடர்ந்து மேடையேற்ற முடியும். ஈழத்து நாடகத்துறையில் அப்போதுதான் ஒருபுதிய திருப்பத்தை ஏற்படுத்த முடியும்" என்று மேலும் விளக்கமளித்தார், பழுத்த நாடக அனுபவஸ்தரான எஸ். ரி. ஏ.

ஈழத்துத்தரமான எழுத்தாளர்களால் எழுதப்பட்ட நாடகங்களைத்தான் முழுக்க முழுக்க மேடையேற்றப் போகிறது, தொழில் முறையாக இயங்கப்போகும் இந்த மன்றம்.

இலக்கியம் - புராண நாடகங்களுக்குத்தான் முக்கிய இடமளிக்கத் திட்டமிட்டபோதிலும், சமூகநாடகங்களும் மேடையேறத் தவறமாட்டாது என்று சொல்லிவைத்தார் அரசு.

ஈழத்து நாடகத் துறையிலுள்ள பலவேறு பிரச்னைகள் குறித்து மனம்விட்டு என்னுடன் பேசிய அரசு, நாடகங்கள் எப்படி அமையவேண்டும் என்பதை வெகு அழகாகச் சொன்னார்.

இப்படித்தான் சமுதாயம் வாழவேண்டும் என்பதைக் காட்டவேண்டுமேதவிர இப்படித்தான் சமுதாயம் வாழ்கிறது என்பதைக் காட்டுவது நாடகமல்ல!' - நினைத்தபடியெல்லாம் நாடகங்களை மேடையேற்றுபவர்களுக்கு அருமையான புத்திமதி.

### பெண்களும் நடிப்பார்கள்

'பெண் பாத்திரங்களுக்கு இனி நிஷம் பெண்களையே நடிக்க வைக்கப்போகிறோம். அமெச்சூர் நாடகமன்றமாக இருந்தபோது ஆண்களே பெண்கள் பாத்திரங்களை ஏற்று நடித்தார்கள். ஆனல் தொழில்முறையில் இப்படிச் செய்யமுடியாது. விண்ணப்பங்கள் கோரி சிறந்த பெண்நடிகைகளைத் தேர்ந்தெடுப்போம்' என்று கூறிய அரசு -

'எந்தக்கோவிலுக்கு இந்த நாடகம்? எந்த சனசமூக நிலைய நிதிக்காக இந்த நாடகம்?' என்றபரிதாபகரமான நிலையை மாற்றி, 'நாடகம் ரசிகர்களுக்காக' என்ற நிலையை ஏற்படுத்தவேண்டும். கொண்டோடித் திரிந்து கெஞ்சி ரிக்கெற் விற்று நாடகம்போடும் நிலைமாறி, சினிமாவைப்போல வாசலிலேயே ரிக்கற் முழுவதும் விற்பனையாகும்நிலை ஏற்படவேண்டும்' என்று உணர்ச்சிவசப்பட்டுக் கொதித்தார்.

நாடகத்துறையில் மட்டுமல்ல, சினிமாத் துறையையும் நன்கு தெரிந்துவைத்திருக்கிறார்.

ஈழத்தில் தயாரான 'ராக்கி டிரைவர்' படத்தில் நடித்திருக்கிறாரல்லவா! வி. எஸ். ரி யின் குத்துவிளக்கிலும் ஒருசிறு பாத்திரத்தில் நடித்திருக்கிறார்.

(அடுத்த வாரம் முடியும்)

## சபாஷ்!

### சங்கானை கலையகம்!!

சங்கானை கலையகத்தினரை நிச்சயமாகச் 'சபாஷ்' 'சபாஷ்' என்று பாராட்டாமல் இருக்க முடியாது. சென்ற 18-ந் திகதி அவர்கள் சங்கானையில் நடாத்திய கலைவிழாவைப் பார்த்தவர்கள் நிச்சயமாக இப்படித்தான் பாராட்டுவார்கள் போட்டி நாடகங்கள் போட்டு, பல் சுவைப் போட்டி நடாத்தி, கடமையா காதலா என்ற அருமையான நாடகத்தினை நிகழ்த்தி அதிகாலை 5 மணி வரை ஆயிரத்துக்கு மேற்பட்ட ரசிகர்களை இருந்த இடத்தை விட்டு அகலாத படி செய்த சங்கானை கலையகத்தை நெஞ்சார வாழ்த்துகிறோம் இவ்வாரத்தில் இடமின்மையால். அடுத்த வாரம் அந்தக் கலைவிழாவைப்பற்றி நிச்சயமாக எழுதுகிறேன்.

— மேகலா

★ நாட்டுக் கூத்து ★

## கண்டி அரசன்

கீர்த்தி சிங்களின் கொடுங் கோலாட்சியை விளக்கும் சரித்திரக்கதை தான் கண்டியரசன் நாட்டுக்கூத்தின் கதையாகும்.

இதில் முதல் கண்டியரசனாக நடித்த திரு. அ.குசைமுத்து திறமையாக நடித்தார்: முகபாவனைகள், அசைவுகள், வீரஉணர்ச்சிகள், கம்பீரங்கள் மிகவும் எடுப்பாக அமைந்தது. தாளலயங்கள்மிகமிக நன்றாயிருந்தது. சிந்துபாடி, கவிவெட்டு எடுப்பதற்கு இவரைப் புகழ்பெற்றவர்களில் இவரும் ஒருவராவார்.

கண்டியரசனின் மனைவியான அயிலைக்கு நடித்த தொ. திரவியம் நன்றாக நடித்தார்.

முதல் மந்திரியான பிலிமத்தலாவையாக நடித்தவ. ராசுவின் முகபாவனைகள், நடிப்பு, தாள அமைப்புகள் நன்று இவர்சேனகனாக நடிக்கும்போது கைகளால் நகைச்சுவையும், இன்னும் சேட்டைகளும் செய்தது ரசிகர்களை கவர்ந்தது.

கண்டி ராசாவின் சேனாதிபதியான திசநாயக்காவாக நடித்த திரு. சுவாம்பிள்ளை கம்பீரமாகவும், வீரஉணர்ச்சியுடனும் நடித்தார்.

சகலபொலையின் மனைவியான குமாரிசாமியாக நடித்த திரு. செல்லத்துரையின் பெண்வேஷம் நன்றாக அமைந்தது. குமாரிசாமியின் தங்கையாகிய நஞ்சியாக நடித்த செல்வி குஞ்சுமுத்து ராணி மிகவும் நன்றாக நடித்தார்.

பின் கண்டியரசனாக நடித்த திரு ச. சிலுவைராசா முகபாவனைகளோடு, மேடை அமைப்போடு, தாளலயங்களோடு பாடி, நன்றாக நடித்தார்.

மக்களின் கரகோஷத்துக்கிடையே இளைஞன்போல் வெள்ளைக்கார கவர்னர் வேஷத்தில் மேடையின் முன்பு தோன்றினார். அவர் நடிப்பும் தாளமும், வேஷமும் நன்று.

வெள்ளைக்கார மந்திரியாக நடித்த திரு. ஓர்த்தையாவின் வேஷமும், நடிப்பும் நன்று.

வெள்ளைக்கார தளபதியாக நடித்த சி. அந்தோனிப்பிள்ளை மிகவும் கம்பீரமாகவும், உற்சாகமாகவும் நன்றாகப் பாடி நடித்தார்.

பின் நஞ்சியாக நடித்த ஆரோக்கியநாதன் நன்றாக நடித்தார்? மணிபோல தான அமைப்பு. ஆனல் வேஷம் பொருந்தவில்லை.

செட்டியாராக நடித்த திரு. அந்தோனிப்பிள்ளை மிகவும் நன்றாகதாளத்தோடு பாடினார்.

பொருளான சீன்ஸ், காட்சியமைப்புகள் எல்லாம் நன்று. 'கண்டி அரசன்' நாட்டுக்கூத்து, நாட்டுக் கூத்தின் மறுமலர்ச்சியாகும்.

இது ஆனைக்கோட்டை நாடகத் தலைவரும், கொக்குவில் கிராம சங்க உதவித் தலைவருமான திரு 'சவரி' ம். அந்தோனிப்பிள்ளையின் முயற்சியினாலும், ஊக்கத்தாலும் திருவாளர்கள் மு. குசைப்பிள்ளை குருசுமுத்து, ஆ. இரத்தினம், மடுத்தீன் போன்றவர்களின் உழைப்பாலும், மக்களின் ஆதரவாலும் வெற்றிகரமாக மேடையேறியது.

ஆனைக்கோட்டை யூனியன் கிளப் அரங்கில் ஆர்ச். அடைக்கலமாதாவின் உற்சவத்தை முன்னிட்டு இக்கூத்து மேடையேற்றப்பட்டது.

— புஷ்பம்




## இசை அரங்கேற்றம்



புலோலியூர் வி. வி. முத்தையாவின் இசை அரங்கேற்றம் இவ்வாரம் பருத்தித்துறையில் நிகழவிருக்கிறது. இவர் சென்னை சங்கீத வித்துவ சபையில் நான்கு வருடங்கள் இசைப் பயிற்சி பெற்று டிப்ளோமா பட்டம் பெற்றவராவர். இவரது இசை அரங்கேற்றம் இம்மாதம் 30-ந் திகதி பருத்தித்துறை சத்தார தோட்டம் முதலியங்கன் ஆலயவீதியில் நடைபெறவிருக்கிறது. திருபரம் தில்லைராஜா இவ்வைபவத்திற்குத் தலைமை தாங்குவார்.

"கடமையின் எல்லை" என்ற ஈழத்துத் தமிழ்ப் படத்தில் திரு. முத்தையா பின்னணி பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

...பிடுக்காவிட்டால் இலங்கையின் என்ன நேர்ந்திருக்குமோ என்று நினைக்கவும் ...தயங்குகிறது. 1958 ...ன் மாதம் நிகழ்ந்த ...டிய இனக்கலவரத்தின் பின் நாடு முழுவதிலும் ...வெஷ நஞ்சு பரவியிருந்... தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிப்புண் சரியாக ...வில்லை. அப்படியான நிலையில் காலஞ்சென்ற ...டாரநாயகாவை சுட்... யாரென்று தெரியாம... ந்தால் என்ன விதமான ...ந்தளிப்பு ஏற்பட்டிருக்... அப்படி ஏதாவது ...ரித்தம் விளையுமோ ...று அஞ்சித்தான் போ... காலஞ்சென்ற பண்டாரநாயகா அந்த வார்த்தையைச் சொன்னார். அவர் ...விதம் கூறியதாக ...வொலியும் பத்திரிகைக... செய்தி வெளியிட்ட ...புதான் நாடு முழுவதும் ... ஆறுதல் நெடுமூச்சு ...விட்டது.

## ...ற்றுமை ...வேண்டும்

...டிப்படையில் அவர் ஒரு ...தான விரும்பி என்பது ...சந்தர்ப்பங்களில் தெரிய ...ருக்கிறது: 1957ம் ...டு இலங்கை பல்கலைக்... ...த்தின் பட்டமளிப்பு ...வில் பேசுகையில் அவர் ...ன்னார்; 'இன்று நாம் ...யினுலோ. மொழியி... ...லா. பொருளாதாரத்தி... ...லா.. சமூகத்திலுலோ ...லது வேறெதனாலோ ...ற்றுமை இருக்குமாயின் ... ஒன்றாக இசைந்து ... முடியாதென்ற அவ... அந்த வேற்றுமைகளை ...வெறுப்புக்களையும்வளர ...ப்படாது. உலகம் முழு...மே இப்பொழுது ஒரு ...மாக நெருங்கிவர முய...றது. நாம் விரும்பினா... விரும்பாவிட்டாலும் ...ாக வாழ வேண்டும் ...லது ஒன்றாக மான... ...ண்டும்'

...ர்க்க தரிசனமான இந்த ...ர்த்தைகள் நமக்கு ஒரு ...ங்கரை விளக்கம் போலி... ...வேண்டும்.

# பயன்தரு பாம்புப் பண்ணை

ஆட்டுப்பண்ணை, மாட்டுப்பண்ணை, கோழிப்பண்ணை விவசாயப் பண்ணை, பாற்பண்ணை என்ற பல பண்ணைகளைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். பாம்புப் பண்ணையைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? 'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்பார்கள் ஆனால் சென்னையை



அடுத்துள்ள கிராமமொன்றில் ஒரு பெரிய பாம்புப் பண்ணையை வைத்திருக்கிறார் ஒரு அமெரிக்க இளைஞர். இவரின் பெயர் ரோமுலஸ் வைட்டாக்கர். இவரைக் கண்டால் இவர் பண்ணையில் உள்ள பாம்புகள் நடுங்குகின்றன, அடங்கி வாழ்கின்றன. அன்பாகவும் இருக்கின்றன.

## பாம்பு வகைகள்

சீறிப்பாயும் நல்லபாம்பு, சினம் காக்கும் கண்ணாடி விரியன், கடித்தால் பிழைப்பது அரிது என்று கூறும் கட்டுவிரியன், கண்ணைக் குறிபார்த்து கொத்தும் பச்சைப்பாம்பு, உடம்பைச் சுற்றிச் சட சட வென எலும்புகளை நொறுக்கி விழுங்கும் மலைப்பாம்பு, விரைந்து பாயும் சுருட்டைப்பாம்புகள் அப்பாவிச் சாரைப் பாம்புகள், தண்ணீர்ப்பாம்புகள் மண்பாம்புகள் நிகிதன் குட்டி இப்படி இருபத்தைந்து வகைக்கு மேற்பட்ட பாம்புகள் வைட்டாக்கரின் பண்ணையில் வாழ்கின்றன.

இவற்றைவிடப் பாம்பு ராணி எனக் கூறப்படும் அரணைகள் உடும்பு ஓணான் ஆமை பச்சோந்தி ஆகிய வகைகளும் இப் பாம்புப் பண்ணையில் இடம் பெறுகின்றன.

## பண்ணையாளர்

28 வயதான வைட்டாக்கருக்கு சிறு பிள்ளையாக இருக்கும் பொழுதே பாம்புகள் பற்றி அறிவதில் ஆர்வம் ஏற்பட்டது. இவர் தனது 12-வது வயதிலேயே காட்டில் சென்று ஒரு மலைப்பாம்பைப் பிடித்தார். இப்படிப் பொழுதுபோக்காக அமெரிக்காவில் ஆரம்பித்த இவரது இந்தப்பயங்கர விளையாட்டு இன்று பலன் தரும் தொழிலாகச் சென்னையில் வளர்ச்சி யடைந்துள்ளது. இவர் அமெரிக்காவில் இருந்த பொழுது இராணுவத்தில் கடமையாற்றினார் இராணுவத்தில் இருக்கும்பொழுதே ஓய்வு வேளைகளில் காட்டுக்குச் சென்று பாம்புகளைப் பிடித்து அவற்றின் விஷத்தை எடுத்து மருத்துவ ஆராய்ச்சியாளர்களுக்கு விற்பனை செய்துவந்தார்.

இவரின் பெற்றோர் அப்பொழுது இந்தியாவில் இருந்தனர். அவர்களிடம் இந்தியாவுக்கு வந்த வைட்டாக்கர் இந்தியாவில் தங்கி பாம்புப்பண்ணை வைத்து ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்ற நெடுநாளைய அவாவைப் பூர்த்திசெய்ய எண்ணிப் பாம்புப்பண்ணையைச் சென்னையில் நிறுவினார். இவர் தற்போது பாம்புகள் மற்றும் ஊர்வனபற்றி விரிவான ஆராய்ச்சிகள் நடாத்தி வருகிறார். அத்துடன் விஷப்பாம்புகளில் இருந்து விஷத்தைக் கறந்து மருந்து தயாரிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வருகிறார். இதனால் இவருக்கு நல்ல வருவாயும் கிடைக்கிறது.

## ★ 2000 தடவை பாம்பிடம் கடி வாங்கிய பண்ணையார்

## ★ விஷ வர்த்தகம்

## ★ பாம்பு ராணிகள்

## ★ நவீன மருந்தின் மூலப் பொருள்


## நல்லபாம்பு விஷம்

அமெரிக்காவில் நல்ல பாம்புகள் கிடையாது இந்தியாவிலே இப்பாம்புகள் பெருந்தொகையாகக் கிடைக்கின்றன. நல்ல பாம்பின் விஷம்தான் பல நோய்களுக்கு மருந்து தயாரிக்க உதவுகிறது. இதனால்தான் தான் சென்னையில் பண்ணையமைத்து ஆராய்ச்சி செய்வதாக வைட்டாக்கர் கூறுகிறார்.


## புற்றுநோய்க்கு

நல்லபாம்பு விஷம் புற்றுநோய்க்கான மருந்துகள் செய்யப் பயன்படுத்தப்படுகிறது. மற்றும்பாம்புகள் கடித்தால் உயிரைக் காப்பாற்றத் தயாரிக்கும் ஊசி மருந்திலும் இவ்விஷம் கலக்கப்படுகிறது. பாம்புகடித்தவரைப் பாம்புவிஷம் கலந்த மருந்தாலேயே காப்பாற்றலாம் என்கிறார் ரோமுலஸ்.

(10-ம் பக்கம் பார்க்க)







...ற பரிதாபத்தோடு என்னைப் பார்க்கிறார்.

"சோமு. நீ, எனக்குப் பிள்ளைமாதிரி, நீ உதவாமை ...விட்டா, எனக்கு வேறை ...இருக்கே. நீ செய்யவேண்டியது ஒண்டுதான்."

அவர் மீண்டும் மௌனமாகி உள்ளே நடக்கிற ...பாராட்டத்தில் உருக்குலைந்து திடீரென்று கிழவராகி, எழுந்து அங்குமிங்கும் நடந்தார்.

29

அவர் சொல்லப்போவது ...அது தான் என்று என் உள்ளுணர்வு கூறி, என்னை எச்சரிக்கிறது. நான் மேசையிலிருந்து அவரது குடும்பத்துப் புகைப்படத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

"சோமு!"

நான் திரும்புகிறேன். அந்த முகத்திலே அரை ...றைத் தீர்மானம் ஏதோ ...முடிக்கிடப்பதை காணுகிறேன்.

"நாங்கள் வீடு மாறவேணும். மாறுறதுக் நீர் மாணிக்கிட்டன். இன்னும் எட்டுப்பத்து நாளிலை ஆவரசங்குளத்து வீட்டுக்குப் போகவேணும். அங்கை இடையிலை, நாளைக்கு நான் தனிய, அங்கை வெட்டு ஆரம்பிக்க வேணும், போய் வரப்போறன். நான் போனப் பிறகு,

ஒருகணம் நிறுத்தி, தன் குரலைத் தாழ்த்தி, தொடர்ந்தார்.

"நான் போனப் பிறகு. பெரியம்மாவுக்கு ஏதுஞ் சுகமில்லாமை வந்தா, அவ உன்னைத்தான் டாக்குத்தரிட்டை அனுப்புவா. எனக்காக நீ சும்மா வெளியாலை போட்டு வந்து, ஆஸ்பிரின் கொழும்புக்கோ கண்டிக்கோ போட்டார் எண்டு ஒருபொய் சொல்ல வேணும்.'

இந்த வார்த்தைகள் என் தலையிலே சம்மட்டியாய் இறங்கின

அவர் போய்க் கட்டிலில் இருந்து கொண்டே. "சரி, நீ போய்த் தூங்கு" என்றார்.

தூங்கு!

தூக்கத்துக்குப் பதிலாக, என்னை நோக்கி ஈட்டிகளும் சம்மட்டிகளும் இரவிரவாய் வந்தன.

நான் பெரியவனாய் வளர்ந்து விட்டேன் என்பதற்கு அறிகுறியாக, என்மனம், பெரியையா சொன்ன ஒவ்வொரு வார்த்தையிலும் உதாரத் தோய்ந்திருப்பதைக் கண்டது.

ஆனால்,

"நான் இதைச் சொல்லலாமா? பொய் சொல்லலாமா?"

"இந்தப் பிள்ளையை என்னோடை அனுப்பிவைச்சா நிம்மதி வந்தாலும் வரும்!"

நிம்மதி!

'பொய் சொல்' என்று ஒருவர் வேண்டிக் கொண்டதை விட்டே என் நிம்மதி என்னை விட்டுப் பிரிந்துவிட்டது.

அதிகாலையில், "பால் நினைந்தூட்டும் தாயினுஞ் சால......" என்று குளியலறையில் தொடங்கிக் கோரறையில் முடிந்த பாடலைக் கேட்டுக்கொண்டு இருளில் கிடக்கிறேன்.

பாடல் முடிந்ததும் பெரியையா மேல்வீட்டேறிப் போவது தெரிகிறது.

இதோ, உடனே மேலே திரும்பி விட்டார்.

என்னறையுள் நுழைந்து, என்னருகே வந்து அவர் குனிந்து பார்க்கிறபோது, நான் கண்களை இறுக மூடிக் கொண்டு கிடக்கிறேன்.

கொஞ்ச நேரத்தில் கார் புறப்பட்டு வெளியேபோகிற ஓசை கேட்கிறது.

சிறைச் சாலைக்கு வந்த பிறகு நான் படித்த ஒரு நூலின் பெயர், ஒரு பாடலில் வரும் ஒரு வரி.

"தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவதெக்காலம்?"

இந்தப் பாடல், எனக்கு முன்னரே தெரிந்திருந்தால், அன்றிரவு முழுவதும் இதையே பாடி, பாடுவதிலேயே சுகங்கண்டிருப்பேன்,

[வளரும்]

## லண்டனில் தமிழர் கண்டக்டர்

லண்டனில் இரண்டைத் தட்டு பஸ்ஸொன்றின் கீழ்த் தளத்தில் திரு. தியாகராஜன் என்னும் தமிழர் கண்டக்டராகக் கடமையாற்றுகிறார் ஆறு ஆண்டுகளாகப் பணிபுரியும் அவரது இல்லத்தில் டெலிவிஷன் கார், குளிர் பதனப்பெட்டி எல்லாம் இருக்கின்றன.




## பாம்பு ராணிகள்

# பழக்கம் பலவிதம்!

அன்றாடம் நாம் ஒவ்வொருவரும் ஒருவகையான பழக்கத்தைக் கையாண்டு அதன்படி நடந்து வருகிறோம் அரசியல்வாதிகள், சினிமா நட்சத்திரங்கள், அமைச்சர்கள் என்று பலர் பலவித பழக்கங்களைக் கடைப்பிடித்து வருகிறார்கள். அதைப்போல எழுத்தாளர்களும் தத்தமக்கு ஒரு பழக்கத்தைக் கொண்டு தமது படைப்புக்களை எழுதியிருக்கிறார்கள் அவர்கள் மேல்நாட்டு எழுத்தாளர்கள்.

0 0 0

### அலெக்சாண்டர் மோஸ்

இவர், எழுதும்போது. தனது கதாபாத்திரங்கள் எதிரிலே அமர்ந்திருப்பதைப் போன்று எண்ணிக்கொண்டு அவர்களுடன் சிரித்துப்பேசுவார், உரையாடுவார் தனது படைப்பை அவர் எழுத உட்கார்ந்து விட்டால் அது முடிக்கும் வரை எழுந்திருக்கவே மாட்டாராம்.

எழுதி முடித்ததைத் திரும்பவும் படிப்பதும் கிடையாது.

0 0 0

### 0 பால்ஸாக் 0

பால்ஸாக் என்ற எழுத்தாளர் இரவு உணவை முடித்துவிட்டு உறங்கச் சென்றுவிடுவார். இரவு பன்னிரண்டு மணிக்கு விழித்தெழுந்து எழுத ஆரம்பித்தால் மறுநாள் மாலைவரை அது நீடிக்கும் இடையில் சாப்பிடவே மாட்டாராம்.

0 0 0

முத்து சந்திரசேகரன்

### எமிலி

எழுத்தாளர் எமலி ஜோலாவுக்கு வெளிச்சத்தில் கற்பனை ஓட்சதாம் ஆகவே மங்கலான ஒளியில் அமர்ந்து கொண்டு தான் எழுதுவாராம்.

### ஜோசப்கான்ராட்

ஆங்கில எழுத்தாளரான இவருக்கு குளியலறையில் எழுதினால்தான் தமது கற்பனை ஓடுமாம் நீர் நிறைந்த தொட்டியிலமர்ந்து கொண்டு எழுதுவாராம்.

0 0 0

### அகஸ்தாகிறிஸ்டி

நாவலாசிரியை அகஸ்தா கிறிஸ்டிக்கு தமது வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் போது தான் கற்பனை வருமாம். அப்படியே அங்கேயே அமர்ந்து எழுத ஆரம்பித்துவிடுவாராம்.

0 0 0

### ஹெமிங்வே

ஏர்னெஸ்ட் ஹெமிங்வே என்ற எழுத்தாளர் அதிகாலை ஆறுமணிக்கு எழுத ஆரம்பித்து பகல் பன்னிரண்டு மணிக்கு முடித்து விடுவார் பின்னர் மீண்டும் மறுநாள் காலையில் தான் எழுத ஆரம்பிப்பார். அதே ஆறுமுதல் பன்னிரண்டு வரைதான்!

பழக்கம் பலவிதம் ஒவ்வொன்று ஒருவிதம்.

# எழுத்தாளர் சிலரின் விசித்திரமான பழக்கங்கள்


## மாணவர்களுக்கு விவசாயம், கைத்தொழில்

# நல்லதைச் செய்வோம்!

கூற்றும் காலத்தில் நாம் கற்கக் கூடுமானதைக் கற்பதே அறிவுடைமையாகும். விஞ்ஞானக் கல்வியே சிறந்தது என எண்ணுதல் மதியுடைமையாகா. விவசாயம் கைத்தொழில் ஆகிய வற்றையும் நாம் கற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

### பசி பட்டினியை போக்க...,

விவசாயம், கைத்தொழில் போன்றவற்றைக் கற்பதனால் நாட்டுக்கும் நமக்கும் நல்லதைச்செய்யலாம். விஞ்ஞானக்கல்விகற்ற ஒரு கருத்தவராகவோ, பொறியியலாளராகவோ, ஆசிரியராகவோ வெளிவரலாம். இருந்தும் பயன் என்ன? எத்தனையோ பொறியியலாளர்



செல்வி. அரு. கதிர்

களும்பட்டதாரிகளும் வேலையில்லாமல் திண்டாடும் நேரத்தில் நாட்டின் சுபிட்சமே நமது சுபிட்சம் என எண்ணத் தோன்றுகிறது. நாடு முன்னேற்றமாக, செல்வம் கொழிக்கும் திருநாடாக விளங்கினால்.......பசி ஏது?... பட்டினி ஏது?

விவசாயம் செய்த ஆதி மனிதன், நெற்றிவியர்வை நிலத்தில் சிந்த மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்து தன் வயிற்றுப் பசியைப் போக்கிக் கொண்டான். ஆனால் மனித அறிவு வளர வளர விவசாயம் செய்வது சுலபமாய் அமைந்துள்ளது. விவசாயத்துக்கேற்ற உரமோ, உழுயந்திரமோ, விளைக்கும். நீர்ப்பாய்ச்சும் இயந்திரமோ, அரிவு வெட்டும் இயந்திரமோ, மற்றும் களைகளை அகற்றும் களை கொல்லிகளும் இன்னும் நோய்க் கிருமிகளையழிக்கும் கிருமி நாசினிகளும் விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்பட்டு மனிதனை வாழவைக்கின்றன. இந்நிலையில் மாணவர்கள்விவசாயம் செய்தால் வெட்கம் என்றும் ஆதிமனிதனின் நிலையிலுள்ள கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும் என்ற தேவையற்ற மனத்தாங்கலையுமுடையவராக இருக்கிறார்கள். இவற்றை விட்டு அறிவாற்றலுள்ள திறமையான விவசாயஆசிரியர்களிடம் முறையாக விவசாயத்தைக் கற்று வருங்கால இலங்கையை வளமாக்க மாணவர்கள் முயலவேண்டும். விவசாயம் கற்றபின் செய்வதனால் மண்ணைப் பற்றியும், பயிர்களைப் பற்றியும், அவைகளுக்கேற்ற உரம்பற்றியும், நோய்களைப் பற்றியும் இன்னோரன்ன பிற விஷயங்களையும் நாம் தெட்டத் தெளிவாக அறிந்து அவ்வவற்றுக் கேற்றவாறு செயல்பட ஏதுவாகிறது. விளைச்சலைப் பெருக்கவும் பயிர்களுக்கு நோய்வந்தவிடத்து அவற்றைப் போக்கவும் சிறந்த பயிற்சிபெற்றுக்கொண்டோமானால் விவசாயத்தின்மூலம் நாம் போதுமான பொருளீட்டலாம். நாடும் அன்னிய செலாவணியைக் குறைத்து சிறிது சிறிதாகக்கைப் பற்றிக் கொள்ளும்.

### இரவல் புடைவை வேண்டாம்

தற்போது பல நிபுணர்களின் ஆராய்ச்சியின் மூலம் கடற்பகுதியிலுள்ள மீன்களிலிருந்து பலவகையான பணம் பொருள்கள் செய்யலாம் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பல கைத்தொழில் ஸ்தாபனங்களை நிறுவி மக்கள் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், இப்பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். எனவே நாம் கைத்தொழிலையும் கற்கவேண்டும். நெசவு கற்பதனால் பல நன்மைகள் ஏற்படுகின்றது. காந்தி அண்ணலே கைத்தறியில் கதர் ஆடை நெய்து தாம் அணிந்து கொண்டார் என்றால் நாம் ஏன் செய்யக் கூடாது? காஞ்சிபுரமும், மணிப்புரியும் நம்மை அழகுபடுத்துவதைவிட நம் ஆடைகள் தரத்தில் உயர்ந்தவை அவற்றை உடுப்பதில் தனியழகுண்டு. இரவல் புடைவையில் கொய்யகம் நமக்குவேண்டாம். இதற்கு நாம் மின்தறிகளையோ அல்லது குடிசைக் கைத்தறிகளையோ கொண்டு தீர்வு காணலாம். இப்படிப்பட்ட கல்விமூலம் நாம் மட்டுமல்ல நமது வருங்காலச் சந்ததியினரும் சிறப்பாக வாழமுடியும் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.



மா ண வ ர் * * * ம ல ர்

### ஹொட் லைன்

வல்லரசு நாடுகளின் தலைவர்கள் விரைவில் நேரடித் தொடர்பு கொண்டு பேச அமைக்கப்படும் தொலைபேசித் தொடர்புகளுக்கு 'ஹொட்லைன்' என்று பெயர். வாஷிங்டன் நகரில் இருந்து மாஸ்கோவிற்கும் லண்டனுக்கும் இத்தகைய நேரடித் தொடர்புகள் உள்ளன.

### பொடி விஷம்

சுருட்டு, புகையிலை, பொடி மூன்றும் ஒன்றுதான். உடலுக்குக் கெடுதலை விளைவிப்பது. பொடியில் நிக்கோடின் என்றவிஷம் இருக்கிறது. இந்தப் பொடி ஆரம்பத்தில் ஐரோப்பாவில் இருந்து பின் எங்கும் பரவியது. மூக்கு மூளை, நரம்பு ஆகிய வற்றிற்குக் கெடுதல் விளைவிப்பது



மாணவன்: வெளியில் போகலாமா சார்?

ஆசிரியர்: கூடாது. கூடாது.

(மாணவன் வெளியில் சென்று திரும்பியபோது)

ஆசி: உன்னை வெளியில் போகக்கூடாது என்றல்லவா சொன்னேன்.

மாண: இரண்டு எதிர்மறை ஒரு உடன்பாட்டைக் குறிக்கும் என்று நீங்கள் தானே சொல்லித்தந்தீர்கள்.

## சமய அறிவுப் போட்டி

[அண்மையில் நடைபெற்ற நல்லூர் - கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி யாழ் - மாநகர சபையால் நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் இடம்பெற்றகேள்விகளையும் அக்கேள்விக்குரிய சரியான விடைகளையும் இங்கு பிரசுரிக்கிறோம்: தொகுத்தவர்: பாலசிங்கம் மனோரஞ்சிதமலர்]:

கேள்வி-1: விநாயகப்பெருமானுடைய திருமுகத்தில் ஒடிந்துள்ளதாகக் காணப்படும் ஒற்றைக் கொம்பு எதற்குப் பயன்பட்டது?

வி: கஜமுகச் சக்கரவர்த்தி:

கே-3: நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை முதலாவதாகஸ்தாபித்தவர் யார்? அவருக்குவேறு பெயரென்ன?

வி: ஸ்ரீ சங்கபோதி புவனேகவாகு. வேறு பெயர் செண்பகப்பெருமாள்.

கே-4: நல்லூர்கந்தசுவாமி கோவில்ஸ்தாபகர் இரகுநாத மாப்பாண முதலியாரின் பிரதிமை கோவிலில் எங்குள்ளது?

வி: நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மாமண்டபத்துக் கிழக்குவாசலிலே மேற்கு முகமாக இக்கோயில் தாபகராகிய இரகுநாதமாப்பாணமுதலியாரின் பிரதிமை உண்டு.

கேள்வி-5 நல்லூர்க் கந்தசாமி கோவிலின் புதிய தேரை உருவாக்கிய பிரதம ஸ்தபதியார் யார்? அவரின் ஊர் எது?

பதில்:- இராசகோவிந்தராசா ஆச்சாரியார்.

திருவிடைமருதூர், தென் இந்தியா.

கேள்வி-6 புவனேகவாகுவின் பதக்கம் யாரால் நல்லூர்க் கந்தசாமி கோவிலுக்குக் கொடுக்கப்பட்டது? அவரது தகப்பனார் பெயர் என்ன?

விடை: தேவர்களாலும், பூதங்களாலும், மனிதர்களாலும், மிருகங்களாலும் இறவாவரம்பெற்ற கஜமுகாசுரனைக் கொல்லப் பயன்பட்டது.

வேத்வியாசர்மகாபாரதத்தைச் சொல்ல விநாயகப் பெருமான் எழுதினார். இதனை எழுதுவதற்கு ஒடித்த அவரது ஒற்றைக் கொம்பே பயன்பட்டது.

கே-2: யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூருக்கு 'நல்லூர்' என்று பெயரிட்டவர் யார்?

பதில்:- பூதனாராய்ச்சியாரால் கொடுக்கப்பட்டது.

தகப்பனார் பெயர் சோதிநாதன்.

கேள்வி-7 இறைவனால் அம்மை என்று அழைக்கப்பெற்ற உத்தமி யார்?

பதில்:- காரைக்கால் அம்மையார் (புனிதவதி).

கேள்வி-8 இறைவனைத் தோழராகப்பெற்ற நாயன்மார் யாவர்.

திருநாவுக்கரசு நாயனார்.

சுந்தரமூர்த்தி நாயனார்.

கேள்வி-9 பெண்ணின் தாய்மையை வெளிப்படுத்தப் பரமசிவன் தம்மேனியிலே கொப்புளம் கொண்ட கோலம் எந்தநாயனாருடைய கதையில் வருகிறது?

பதில்- திருநீலநக்கநாயனார் கதையில் வருகிறது.

கேள்வி-10: வட இலங்கையில் முருகனுக்குரிய ஆறு குமரக்கோட்டமும் எவை?

பதில்: நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மாவிட்டபுரம் (கோவிற்கடவை) கந்தசுவாமிகோவில் செல்வச்சந்நிதி முருகன் கோவில் மண்டைதீவு குமாரபுர சித்திர வேலாயுதர் கோவில் பொலிகண்டி கந்தவனக்கடவை சுந்தசுவாமி கோவில் இணுவில் கந்தசுவாமி கோவில்.

(தொடரும்)

## நல்ல முயற்சி வேண்டும்

—கே. என். ராஜா—

முயற்சி வேண்டும் தம்பி-நல்ல
முயற்சி என்றும் வேண்டும்
முயற்சி யுடையோர் வாழ்வு-என்றும்
உயர்ச்சி யுடைய தாகும் (உயர்ச்சி)

முயற்சி இல்லா வாழ்க்கை-என்றும்
இகழ்ச்சி யுடைய தாகும்
முயற்சி யுடையோர் வாழ்வில்-என்றும்
இகழ்ச்சி படைய மாட்டார் (இகழ்ச்சி)

உயர்ச்சி கண்ட மக்கள் - என்றும்
முயற்சி யோடு வாழ்ந்தார்
முயற்சி இல்லா வாழ்க்கை - என்றும்
உருக் குலைந்து போகும் (உருக்)

# வாணி வழிபாட்டின் வரலாறு

கல்வி அல்லது கலை கலையின் பொதுவுடைமை. "கல்வியிற் பெரிய கம்பன்", "கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு", 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' "கண்ணுடையார் என்போர் கற்றோர்", அறிவுடையார் எல்லாம் உடையார் போன்ற தமிழில் எழுந்த கூற்றுக்கள் கல்வியின் முதன்மையினை இனிது எடுத்து இயம்புகின்றன. இவை போன்றே (அறிவே ஆற்றல்) என்ற ஆங்கிலத்தில் வழங்கப்படும் கூற்றும் அறிவின் இன்றியமையாத தன்மையினை வலியுறுத்துகிறது!

## கலைமகள் வழிபாட்டின் வரலாறு

கலைமகளின் வடிவமாய் விளங்கும் கலைமகளை சரஸ்வதி என்ற பெயரில் இந்திய துணைக்கண்டத்தின் வடபகுதிமக்கள் வழிபட்டுவருகிறார்கள். எனினும் வரலாற்றுக்களைக் கண்கொண்டு பார்க்கையில் ஆதியில் சரஸ்வதி வழிபாடு தனித்தெய்வ வழிபாடாகவே விளங்கியதென்பதற்கு இருக்கு முதலிய வேதங்களில் காணப்படும் குறிப்புகள் சான்றாக விளங்குகின்றன. அதுமட்டுமல்ல சரஸ்வதி எனும்பெயர் கடல் நதியின் மறுபெயர் என்றே அறிஞர் மொழிவர். நதிவழிபாடு இயற்கை வழிபாட்டின் ஓர் அங்கம். இதுவே காலப்போக்கில் கலைகளின் தெய்வமாக உருவகப்படுத்தப்பட்டு வழிபடு தெய்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுபோலும்.

## தமிழகத்தில்

தமிழகத்தில் எப்பொழுது கலைமகள் வழிபாடு தோன்றியது என்று கூறல் கடினம். எனினும் மணிமேகலை காலத்திலேயே கலைமகளுக்கு வழிபாடு இருந்ததென்பதற்குச் சான்றுகள் உண்டு. "சிந்தாதேவி செழுங்கலை நியமத்து



நந்தாவிளக்கே' என்றசாத்தனார் சாற்றும் கூற்று செழுங்கலை நியமம் என்ற பெயருடன் மதுரையில் கலைமகளுக்கு கோயில் இருந்ததென்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. எனவே கி. பி. 2-ம் நூற்றாண்டிலேயே கலைமகள் வழிபாடு நிலைத்த ஒரு வழிபாடாக தமிழகத்தில் விளங்கியது எனக்கொள்ளல் தவறுடையது அல்ல.

## கம்பன் கண்ட கலைவாணி

'ஈழவேந்தன்'

இக்கலைமகளை கவியரசன் கம்பன் பாரதி எனப் பெயர் சூட்டி வழிபட்டுள்ளான். 'யாதாம்புவத்திற் பணிவார் தமக்கும் பலகலையும் வேதாந்த முத்தியும் தந்தருள் பாரதி' என்று வரும் சொற்றொடர் எம் கருத்தினை வலியுறுத்துகிறது. தமிழகத்தில் கலைமகளுக்கு பாரதி எனப் பெயரைக் கம்பனே முதலிற் சூட்டினனென எண்ணவும் இடமுண்டு.

## குமரகுருபரன் கண்ட கலைமகள்

இக்கலைமகள் வழிபாட்டில் ஊறித்திளைத்த குமர

## வண்தமிழ் வல்லுனரின் வழிபாட்டு முறைகள்

குருபரர் விண்கண்ட தெய்வம் பலகோடி உண்டேனும் விளம்பில் உன்போன்ற கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலாவல்லியே' என்ற பாடல் வரியின்வாயிலாக கலைமகள் தான் தன் கண்கண்ட தெய்வம் என்று குமரகுருபரர் நிலைநாட்டிச் சொல்வதைக் காண்கிறோம்.

தமிழின் பெருமைபேச எழுந்ததமிழ்விடுதூது 'வீடாளும் வாணியங்கை மேலே இருந்தசோ ஏடாகவுள் மேலிருந்தாளோ' என்ற பாடல் வாயிலாக கலைமகளின் கையில் இருந்தாளோ அல்லது ஏடாக கலைமகளின் உள்மேல் இருந்தாளோ என்ற வினாவினை எழுப்பி நற்றமிழிற்கும் நாமகளுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினை உணர்த்திச் செல்கிறார்.

## பேராசிரியர் கருத்து

முன்னே கூறிய கவிஞர்கள் மரபில் வந்த பேராசிரியர் கலைவாணியைப்பற்றிக் கூறுகையில் 'கலைமகளுடன் பூர்விதை காணுங்கால் அவள் விழியுள் வலதுவிழி தென்மொழியா மதிவசரோ மதியுடையார்?' என்ற கேள்வியினை எழுப்பி வாணியின் வலதுவிழி தமிழ்மொழி தான் என்று நிலைநாட்டி இன்பம் எய்துகிறார்.

## பாரதி கண்ட பாரதி

வழக்கமாக வாணியை வருணிக்கும் கவிஞர்கள் ஒரு கையிலே ஏடு உடையவள் என்றும் மற்றைய மலர்க்கையில் மணிவடம் மிளிரும் என்றும் பிற இரு கைகளில் வீணை விளங்கும் என்றும் விவரித்து அமைதி காண்பது வழக்கம். ஆனால் நம் பாரதியாரோ புலவன் பாரதியோ கூறியது கூறல் என்ற நிலையில் மேற்குறித்த சில குறிப்புகளுடன் கலைமகளை வருணிப்பதில் நிறைவடையவில்லை. மாறாக எம்மைப் பூசிப்பில் ஆழ்த்தும் முறையில் புதிய நடையில் புதிய உவமைகள் கையாண்டு பின் வரும் முறையில் கலைவாணியை வருணிக்கிறார். கலைமகளின் மேனியே ஞானம் என்றும், கூந்தலே சிந்தனையென்றும், விழியே வேதமென்றும், அவளின் இரு செவிகளே வாதந்தருக்கமென்றும், அவளின் அணியே தோடு என்றும், மூக்கே போதமென்றும், வாயே சாத்திரமென்றும், இதழே கற்பனையென்றும், கொங்கைகளே காவியம் என்றும், கைகளே சிற்பம் முதலான கலைகள் என்றும்பொருள்பட பாடியுள்ளார் பாரதியார்.

## கலைமகள் குடியிருக்கும் இடங்கள்

இவ்விதம் உவமைச் செறிவுடன் ஒளி விடும் கலைமகளின் திருவடிவாய் விளங்கும் கலைவாணி எங்கு குடியிருக்கிறாள் என்ற கேள்வியினை எழுப்பும் போது அதற்கும் பாரதி பாங்கான விடையினை 'வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்...' என்ற பாடலில் அழகாகக் கூறியுள்ளார்.

இத்தகைய நலங்கள்நிறைந்த நாமகளை நற்றமிழால் வழிபட்டு வாழ்வும் வளமும் பெறுவோமாக.

---

**குடும்பச் சுடர்**

தயாரிப்பு குணம்

# குழந்தைகள் கண்ணோட்டத்தில்...

கூட்டங்கூட்டமாகக் கூடிவிளையாடும் குழந்தைகள் தங்களைப்போல் குழந்தைகளையும் மற்றும் தாம் விளையாடும் பொருள்களையும் டெலிவிஷனிலோ படக்காட்சியிலோ காணும்போது தம்மையறியாமல் ஆரவாரம் செய்கின்றனர். அவர்களை நேரில்கண்டு அளவளாவுவதுபோல் மகிழ்ச்சியோடு வரவேற்கின்றனர்.



இத்தகைய குழந்தைகளின் ஆர்வத்தைப் பூர்த்தி செய்ய நம்நாட்டில் டெலிவிஷன் காட்சிகள் இல்லை. குழந்தைக்கான படக்காட்சி குறைவு. மேலைநாட்டுக் குழந்தைகள் சுயமாக இயங்க மேற்படி வசதிகள் அங்கு இருப்பதே காரணமாகும்.

## குழந்தை உலகம்

ஜெர்மனியின் பவேரியன் ரேடியோ, டெலிவிஷன் நிலையத்தினர் தற்போது குழந்தைகளுக்கு உலகத்தை 'காணும்' வாய்ப்பை அளித்து இருக்கிறார்கள். இந்த உலகமும் பெரியவர்களின் உலகமே அல்ல. குழந்தைகளின் உலகமே. அதாவது குழந்தைகளுக்குப் பிடித்தமான 'மீன் - பந்து - இருளும் வெளிச்சமும் என்ற மூன்று நண்பர்களும் ஆங்காங்கு போவதுபோல சித்தரித்துக் காட்டுகிறார்கள். இந்த நண்பர்கள் குழந்தைகளைப்போல ஆர்வத்துடன் பல கேள்விகளைக் கேட்டு. எளிய முறையில் பதில்பெறுகிறார்கள் இதன்மூலம் குழந்தைகளுக்கு உலக அறிவு ஏற்படுகிறது.

## விளையாட்டுப்பள்ளி

கடந்த செப்டம்பரில் சிறு குழந்தைகளுக்கான, 'விளையாட்டுப்பள்ளி' என்ற தலைப்பில் இந்நிகழ்ச்சியை பவேரியன் டெலிவிஷன் நிலையம் ஒலிபரப்பத் தொடங்கியது. பள்ளிகளுக்குச் செல்லாத மூன்று வயதுமுதல் ஆறு வயதுவரையிலான குழந்தைகளுக்குத்தான் இந்த நிகழ்ச்சி. சிறு குழந்தைகளின் அறிவு வளர்ச்சியை ஊக்குவிப்பதே இதன் நோக்கம். உலகை குழந்தைகளின் கண்ணோட்டத்திலேயே காணச்செய்து. புரிந்து கொள்ளவைக்கிறார்கள். குழந்தைகளின் 'கோமாளி நண்பர்கள்', இந்நிகழ்ச்சிகளில் முக்கிய பங்கெடுத்துக் கொள்கிறார்கள். பெரியவர்களின் கருத்துக்கு இதில் இடமில்லை. குழந்தைகளின் பல கேள்விகளுக்கு இந்நிகழ்ச்சிகளில் பதில்கிடைக்கும்.

சிறு குழந்தைகள், தனியாக அல்லாமல், தங்கள் பெற்றோர்களுடன் சேர்ந்து டெலிவிஷனை கண்டுகளிப்பதால், பெற்றோர்களுடன் மேலும்பேசி தங்கள் அறிவை வளர்த்துக்கொள்ள வசதிப்படும் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள்.

ஊர்ஸ் எம். ஆல்டன்

## வருகிறது வைட்டமின் "கே".

எத்தனையோ வைட்டமின்கள் உள்ளன. 'ஸ' என்ற வைட்டமின் ஒன்று இருந்தால் அதையும் வாங்கலாம் என்று விளையாட்டாகக் கூறுவதுண்டு. இப்பொழுது மேலும் ஒரு புதிய வைட்டமின் பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுதான் வைட்டமின் "கே".

இந்தவைட்டமின் 'கே' 'கீல்வாத'ம் என்னும் நோய்க்கு சிறந்த மருந்தாகும் என பிரிட்டன் மருத்துவர்கள் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்துள்ளனர்.

கை கால்களின் நரம்புகளை முறுக்கிக் கொண்டு அசைக்கமுடியாது செய்யும் கீல்வாதம் எனும் நோய்க்கு ஒரு மருந்து இருக்கிறது. ஆனால் அம் மருந்து கீல் வாதத்தை குணப்படுத்தினாலும் பிற விளைவுகளை ஏற்படுத்திவிடும். இந்தக்குறை இல்லாதது வைட்டமின் "கே".

கடந்த மாதம் பிரிட்டனில் நடைபெற்ற வைத்திய நிபுணர்கள் மகாநாட்டில் இந்த வைட்டமின் 'கே' அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது.

ரூபா 1000/- தொடக்கம்
ரூபா 5000/- வரை சேமிப்புக்கு
வருடம் 7 சத வீத வட்டி
கொடுக்கப்படும்
இச் சேமிப்பை 7 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்.
தம்பி அன் கோ.,
284, காங்கேசன்துறைவீதி வண்ணார்பண்ணை.

# "போனால் போகட்டும்" என்ற மனப் பக்குவம் ஏற்பட வேண்டும்!

'எனக்கென்ன கவலையென்றுக...?' இப்படி தினமும் பலர் கூறக்கேட்கிறோம். சிலர் எதற்கெல்லாமோ கவலைப்படுவார்கள். கவலை ஒரு தொற்றுநோய் போன்றது. மற்றவர் தம் கவலையைச் சொல்வதால் நாமும் சேர்ந்து ஒருமுறை சொல்லி அழுவோமே என்ற உணர்விலும் சில வேளைகளில் இந்தக் கவலை வளர்க்கப்படுகிறது. இப்படிக் கவலை வளர்ந்து கொண்டிருப்பதால் ஆகப்போகும் நன்மை? ...ஒன்றுமே இல்லை நம்பிக்கை தளர்ந்து சோர்வுறும் உள்ளங்களையே நாம் உருவாக்கிக் கொண்டிருப்போம்.

கவலையை வளர்ப்பதை விடுத்து அதனை விரட்டுவதற்கு நாம் பழகிக்கொள்ள வேண்டும். வாழ்வதற்கு வழியே அதுதான்.

நிதானம் ஒழுங்கு, திட்டம், தளராதமனம், நம்பிக்கை, உறுதி. முன்யோசனை இவை கவலையைத் தடுப்ப

நிற்கின்றன. கவலையால் இவை ஓய்ந்து விடவில்லை. மாய்ந்துவிடவில்லையே.

### போனால் போகட்டும்

நாம் எல்லாம் பெரிய சாதனைகள் செய்யப்பிறந்திருந்தாலும் சாதாரண மனிதர்களாக நம்மை நினைத்துக் கொள்வது நல்லது. 'இந்தப் பெரிய அந்தஸ்தும் போய்விட்டால்?' இப்படிப் பலர் யோசித்துக் கவலைப்படுகிறார்கள். 'போனால் போகட்டும்' என்ற மனப்பக்குவம் உடலைப் பாதுகாத்துக் கொள்கி

பிரச்னைகளில் எதையாவது தீர்க்கமுடியுமா என்று நல்ல நோக்கத்துடன் ஆராயுங்கள்.

மனைவிக்கு ஒரு நல்லசேலை வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று கணவனும் கணவனுக்கு ஒரு நல்ல உடைவாங்கிக் கொடுக்கவேண்டுமென்று மனைவியும் எண்ணுவது எவ்வளவு இனிமையான நினைவாக இருக்கும். இதுவும் கவலையை சில வேளைகளில் தோற்றுவித்து விடலாம் என்கிறீர்களா? அன்பு களிக்கும் பொழுது கவலையின்

யும் மனத்தையும் சிறைப்படுத்தி வைத்திருப்பதைவிட சிறகடித்துப்பறக்கவிடுவது நல்லது.

பெரிய சோக நடிகர்களைப் போல நம்மை பாவித்துக் கொண்டு முகத்தைத்தொங்கப்போட்டுக் கொள்வதால் வீணாக சுருக்கங்களைக் கட்டிக் கொள்கின்றோம். வறட்சித் தத்துவங்கள் ஒருபோதும் வாழ்க்கைக்கு உதவாது. என்றோ ஒருநாள் சாகப்போகின்றோமே என்று நினைத்து நினைத்து தினமும் செத்துக்கொண்டிருப்பதைவிட சாகிறபோது சாவோம் இருக்கும்பொழுது பயனுள்ளவர்களாக வாழ்வோம் என்று நினைப்பது நல்லது. கவலைப்படுவதற்கு நேரத்தைத் தேடிக்கொண்டிராமல் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு நேரத்தைத் தேடிக்கொண்டிருப்போம்.

### சிரியுங்கள்

'இறக்கும்வரை உபயோகிப்பதற்கு என்னிடம் பகிடிகள் போதியளவு இருக்கின்றன' என்கிறார் பிரபல ஹொலிவூட் நகைச்சுவை நடிகர் பொப்ஹோப் சிறிது சிந்தித்தால் இதன் ரகசியம் புரியும் சிரிக்கப் பழகிக்கொள்ளுங்கள். நல்ல சந்தர்ப்பங்கள் கிடைக்கும்

நமது தவறுகளைத் திருத்திக்கொள்வதற்கும் முன்னேறுவதற்கும் சந்தர்ப்பம் இருக்கிறது. சீரான திட்டம் மூலம் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

சுடச்சுடப் பதில்கொடுத்து விட்டோமே என்று உடனே நினைத்துப் பெருமைப்பட்டுக்கொண்டாலும், பின்னர் அது ஏதோ ஒருவித வேதனையைத்தான் ஏற்படுத்தும். நமது கெட்டித்தனத்தைக் காட்ட இதைவிட எத்தனையோ நல்ல சிறந்த வழிகள் இருக்கின்றன சுடச்சுடப் பதில்கொடுத்து முன்னேறியவர்கள் அதிகப்பேர் இருக்கமுடியாது. உண்மையான, சலியாத உழைப்பு, சாதனை இவைதான் அநேகரை முன்னேற்றியுள்ளன. பதில்களை ஆறுதலாக சிந்தித்து கொடுப்பது நல்லது. தவறு ஏற்படாது. மதிப்பு உயரும், கவலைப்படவேண்டிய அவசியத்தை அது நமக்கு ஏற்படுத்தாது. அது மட்டுமல்ல நமது கவலையைத் துடைப்பதற்கு பலர் முன்வருவார்கள். கனியில்தான் இனிமை இருக்கிறது. காயில் அது இருப்பதில்லை. கொதிக்கும் முகத்தைவிட குளிரும் முகத்தில்தான் அழகே ஊறுகிறது.

## வரட்சித் தத்துவங்கள் வாழ்க்கைக்கு உதவாது!

தற்குத் தேவையான சில முக்கியமான அம்சங்கள் கவலையை மறப்பதற்கு இன்னும் என்னென்ன தேவைப்படுகிறது?

கவலை கலந்த விஷயங்களைப் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். உற்சாகமளிக்கும் நல்ல விஷயங்களைப் பற்றிப் பேசுங்கள்.

நாசமாக்கப்பட்ட நினைவுகளை நம்பிக்கைதான் கட்டி எழுப்புகிறது.

### நம்பிக்கை வேண்டும்

எதிர்காலம் நல்லதாகவே இருக்கப்போகிறது என்று எண்ணுங்கள் தீயதாகவே இருக்கப்போகிறது என்று பயப்படுவதைவிட இப்படி நினைப்பதால் தவறொன்றும் ஏற்பட்டுவிடாது.

இன்று உயர்ந்து நிற்கும் பல தலைவர்கள் கவலையைப் புறக்கணித்துவிட்டு நம்பிக்கையைக் கட்டி வளர்த்தவர்கள் தான். போர் சிதைத்த நாடுகளெல்லாம் இன்று மீளெழுந்து உயர்ந்து

நது. உள்ளத்துக்கு தைரியமூட்டுகிறது. எந்தநிலைக்கும் தயாராகிக் கொள்ளுங்கள். வாழ்க்கையின் வெற்றிக்கு இதுவும் தேவைப்படுகிறது.

எல்லாவற்றையுமே சீரியசாக எடுத்துக்கொள்ளாதீர்கள். கவலைதான் மிஞ்சும். சுடுசுடு என்றிருப்பதால் காரியங்களெல்லாம் நடந்துவிடாது. முகத்தில் இருக்கும் மலர்ச்சியை நாமே கொல்வதற்கு இந்தக் கடுகடுப்பைவிட நச்சு மருந்து வேறு ஒன்று தேவையில்லை. தனக்கும் பிறருக்கும் சேர்த்து ஏதாவது கவலையைத் தேடிக்கொள்கின்றோம். கவலை இரத்தத்தைக் கொதிக்க வைக்கும் ஒரு நெருப்பு.

### அடுத்தவர் பற்றியும் சிந்தியுங்கள்

உங்களைப்பற்றியே முழுக்கமுழுக்க சிந்தித்துக் கொண்டிருக்காமல் அடுத்தவர் பற்றியும் சிறிதுநேரம் சிந்தியுங்கள். அவர்களது

சுமை எங்கே தெரியப் போகிறது.

தினமும் ஏதாவதொரு நல்ல 'தினசரியை'ப்படியுங்கள். உலகத்தில் எத்தனையோ கவலைக்கூடாகவும் மனம் சலிக்காமல் பலர் முன்னேறிக் கொண்டிருப்பது தெரியவரும். உங்களைப் பற்றிய கவலைகள் அப்போது உங்களுக்கு சிறிதாகிவிடும். சில வேளைகளில் எங்கோ ஒரு மூலையில் மறைந்து போய்விடும்.

### அழகை ரசியுங்கள்

எல்லாத்துறை பற்றியும் அறிந்துகொள்வதில் நல்ல அக்கறை காட்டுங்கள். அழகான காட்சிகளை ரசிக்க ஆவல் காட்டுங்கள். கடற்கரை, பூந்தோட்டம், விளையாட்டு மைதானம், இசைக்கச்சேரிகள், நடனக்கச்சேரிகள் இவற்றுக்கு செல்லக் கூடியநேரங்களில் செல்லுங்கள். ஒரேயடியாக உங்களை

**க. கணேசலிங்கம்**

போது நன்றாகச் சிரியுங்கள் கவலையைத் தேய்க்க சிரிப்பு மிக நன்றாக உதவுகிறது.

ஓய்வாக இருக்கும்போது சிறிது நேரம் அடுத்தநாளைப் பற்றியும் சிந்தியுங்கள். ஒழுங்கான வேலையால் பல வீணான கவலைகளைக் குறைக்கமுடியும். பதறும்பொழுது பலர் மீது எரிந்து விழ நேரிடும். இது கவலையை இரட்டிப்பாக்குமே தவிர விரட்ட உதவாது. ஒவ்வொருநாளும்

'வயது போய்விட்டது' 'வயதுபோய்விட்டது' என்று சதா சிந்தித்துக்கொண்டிராதீர்கள், வயது உங்களுக்கு மட்டுமல்ல உலகிலுள்ள எல்லோருக்குமே போய்க் கொண்டுதானிருக்கிறது. எவராலுமே நிறுத்த முடியாத ஒன்று இது. அனுபவம் உள்ளவர்கள் தேவை என்ற விளம்பரத்தைப் பார்க்கிறீர்களல்லவா? வயதுக்கு எத்தனை மதிப்பு பார்த்தீர்களா? பிரயோசன

(11-ம் பக்கம் பார்க்க)

---

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

# பயன்தரு பாம்புப் . . . .

### நவீனமருந்தின் மூலப்பொருள்

பாம்புகளின் விஷம் பல நவீன மருந்துகளுக்கு மூலப்பொருளாக இன்று இருப்பதால் இவர் பாம்புகளின் விஷத்தைச் சேகரிப்பதோடு மட்டும் நில்லாது பாம்புகளின் குணங்கள் அவற்றின் வாழ்க்கைமுறை ஆகியன பற்றியும் ஆராய்ச்சி நடாத்துகிறார்.

இப்பண்ணையில் பல தொட்டிகளைக்கட்டி ஒவ்வொரு தொட்டிகளிலும் ஒவ்வொரு இனப்பாம்புகளை வளர்க்கிறார். தொட்டிகளின் உயரம் 6 அல்லது 7 அடி. இருக்கும் கும்பல் கும்பலாக இவைகளில் பாம்புகள் நிறைந்து கிடக்கும். இவர் வளர்க்கும் முறையால் இத்தொட்டிகளின் மேற்பகுதி மூடப்படாதிருந்தும் பாம்புகள் வெளிவருவதில்லை. சில பெரிய பாம்புகளின் தொட்டிகளுக்கு மட்டும் மேற்பகுதி வலைகள் போட்டிருக்கிறார்.

### பாம்பு வாழ்க்கை

நல்லபாம்பு, கண்ணாடிவிரியன், கட்டுவிரியன் சுருட்டை ஆகியன இவர் பண்ணையில் உள்ள விஷப் பாம்புகளாகும். "இவற்றில் அதிக அபாயகரமான விஷம் உள்ளது கண்ணாடி விரியன். ஆசியாவிலேயே இது போன்றவிஷம்உள்ள பாம்பு கிடையாது. கட்டுவிரியன் ஏறக்குறையநல்லபாம்பளவு விஷம்உள்ளது சுருட்டைப் பாம்பு சாண் அளவிற்கு குட்டையாக இருந்தாலும் இரைச்சல் போட்டுக் கடிக்கும் கொல்லாத விஷப் பாம்பு" என்கிறார் வைட்டாக்கர்.

### 2000 தரம் பாம்பிடம் கடிவாங்கியவர்

பாம்புகளோடு பழகும் இவரைப் பாம்புகள் எப்படிக் கடிக்காமல் இருக்கும். விஷம் உள்ள பாம்புகள் இவரைத் தடவைகள் கடித்துள்ளன, தன்னிடம் மருந்து இருப்பதால் இவர் தப்பித்துக்கொண்டார். விஷமில்லாத பாம்புகள் 2000 தடவை வைட்டாக்கரைக் கடித்திருக்கும். ஆனால் அவற்றால் அபாயம் ஏற்படவில்லை.

### பயந்தாங்கொள்ளிப் பாம்பு

தனது பண்ணையில் உள்ள பாம்புகளில் நல்ல பாம்பு பற்றி வைட்டாக்கர் பின்வருமாறு கூறுகிறார்.

ஐயோ பாவம்! நல்லபாம்பு. ரொம்பப் பயந்தாங்கொள்ளி!! நல்லபாம்பு அதிகம் கண்களுக்கு அகப்படாததற்குக் காரணம் யாராவது வருவது தெரிந்தால் வேகமாக இடத்தைக் காலி செய்து ஓடிஒளிந்துகொள்ளும். தற்செயலாகப் பயந்துகொண்டு தற்பாதுகாப்புக்காகத்தான் கடிக்கும். கோபத்தோடு ஆட்களை விரட்டிச்செல்லும் என்பதெல்லாம் வெறுங்கதை. எவ்வளவுதூரத்திற்குத் தலையைத் தூக்கிப் படமெடுக்கிறதோ அவ்வளவு தூரத்திற்குத்தான் கடிக்கும். சுமார் இரண்டடி படமெடுத்தால் கடிக்கும்போது நாம் விலகி நின்றுவிட்டால் அந்த இரண்டடி தூரத்திற்குத் தரையில் அடிக்கும். மறுபடியும் தயாராவதற்குள் போய்விடலாம். அதுவும் ஓடிவிடும்.

### உணவு

இப்பாம்புகள் யாவற்றிற்கும் தவளை, எலி ஆகியவற்றைப் பணம்கொடுத்து வாங்கி உணவாகக் கொடுக்கிறார். பண்ணைக்கு அருகிலுள்ள கிராமத்திலுள்ளமக்கள் தவளைகள், எலிகள் ஆகியவற்றைப் பிடித்துக் கொண்டுவந்து இவருக்கு விற்கிறார்கள். கட்டுவிரியன் போன்ற சில பாம்பு, பாம்புகளைப் பிடித்துத் தின்னும் பழக்கமுள்ளதால் அவற்றைப் புறம்பாக வைத்து அவற்றிற்குத் தேவையான உணவைத் தேடிக்கொடுக்கிறார்.

பண்ணையில் உள்ள பாம்பு இனங்களில் கண்ணாடி விரியன், சுருட்டைப் பாம்பு ஆகியஇரண்டும்குட்டிபோடுகின்றன. ஏனையவைமுட்டையிடுகின்றன.

### விஷம் எடுத்தல்

நல்ல பாம்புத் தொட்டியின் அடிப்பாகத்தில் நான்கைந்து குழிகள் உள்ளன. மேலே இரண்டு செங்கற்களைக் குறுக்காகவும் ஒரு கல்லை நேராகவும் வைத்துச் சிறுவழிமட்டும் விடப்பட்டுள்ளது. ஒருகுழியில் 8, 10 என நல்லபாம்புகள் சுருண்டு படுத்துக் கொள்கின்றன. நுனியில் கொக்கி போன்ற வளைவுள்ள தடியில் கோர்த்துப் பாம்பை வெளியே எடுத்து, வாலைப் பிடித்து, அது கடிக்காதபடி தலையைப்பிடித்து சிறிய கிளாஸில் விஷம்கக்கவைக்கிறார் வைட்டாக்கர். சுமார் 50 பாம்புகளின் விஷம் எடுத்தால்தான் ஒரு அவுன்ஸ் தேறும்.


### விஷவர்த்தகம்

ஆனால் இவ்விஷத்தின் விலை அதிகம். இந்தியாவிலுள்ள சில மருந்து தயாரிக்கும் கம்பனிகளுக்குத் தற்போது வைட்டாக்கர் விஷம் கொடுத்துவருகிறார். இதைவிட அமெரிக்கா, ஜெர்மன் போன்ற நாடுகளில் இவ்விஷத்திற்கு அதிக கிராக்கியுண்டு. உலக காட்டு வாழ் பிராணிகள் நிதியில் இருந்து தற்போது இவரது ஆராய்ச்சிக்கும் பண்ணைக்கும் சிறிது நிதியுதவி கிடைத்து வருகிறது.

நல்லபாம்பு போன்ற பாம்புகளின் விஷத்தை ஒரு கிராம் 100 ரூபாவாகவும், மிகஅபூர்வமாகக் கிடைக்கும் கோரல்பாம்பின் விஷம் கிராம் 10,000ஆகவும் விற்கிறார் வைட்டாக்கர்.

வைட்டாக்கரின் பாம்புப் பண்ணையை ஏராளமான மக்கள் சென்று பார்வையிடுகிறார்கள். இந்தப் பண்ணையைச் சுற்றிப் பார்ப்பவர்களுக்குத் தலைக்கு 25 சதம் வசூலிக்கிறார் இவர். இவரின் பண்ணை அலுவல்களைக் கவனிப்பதற்கு நீடா ஆண்டர்ஸன் என்ற அமெரிக்கப் பெண்ணைச் செயலாளராக வைத்திருக்கிறார்.

## லிடோ [யாழ்நகர்]
(காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30)
றிஜ்ஸ்லி (கொழும்பு)



கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்
கதை - வசனம் - டைரக்ஷனில் உருவாகி
ஜெமினி—வாணிஸ்ரீ — முத்துராமன்
சுந்தரராஜன் - நம்பியார்—நாகேஷ் - வாசு
நடித்த

# தபால்காரன் தங்கை

உள்ளத்தைத்தொடும் 6-வதுவாரம்

## வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00

# தெய்வ மகன்



சிவாஜி
[3 மாறுபட்ட வேடங்களில்]
ஜெயலலிதா
நம்பியார் — நாகேஷ்
சுந்தரராஜன்
நடித்தது.

## MANOHARA
Jaffna
Daily 4-45, 7&9-45 p.m.
Sat, Sundays 10-30 a.m.
THE WARRIOR AND THE SLAVE GIRL
(Cinemas cope Color)

## வெல்லிசினிமா
காலிமுகம்
பி. ப 2-30, 6-30, 10-00
ஜெய்சங்கர்-வாணிஸ்ரீ
நடித்த
கன்னிப் பெண்

## REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m.
Sat, Sunday 10-30 a.m.
Client Eastwood
in
TWO MULES FOR SISTER SARA
(Cinemascope color)

தினசரி 2-00, 9-45
எம் ஜி ஆர்-ஜெயலலிதா
நடித்த
தனிப்பிறவி
(புதியகொப்பி)

## வரி விளம்பரம்

காலம் பெருகிறொனது. ஒரு வைக்கல் மிக்கேலைச் சலவைப்பவுடரில் அநேக துணிகளை சலவைசெய்ய லாம் வெற்றுறை ஒன்றை அனுப்பி வெளியீட்டுப் புத்தகங்களைப் பெற்றுக்கொள் ளுங்கள். மிக்கேலைச் சோப் தொழிற்சாலை. யாழ்ப்பாணம். 3520

### FOR SALE
Two acres Coconut on Kachchai Road 1 1/2 miles from Chavakachcheri in lots or enbloc Suitable for building and Agricultral. Asul 25, Chemmany Road, Nallur. 3609

## நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி 4-30 மட்டும்
சனி, ஞாயிறு 10-30
BECAUSE OF EVE

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-ஜெயலலிதா
நடித்த
கலாட்டா கல்யாணம்

## கலை மன்றம்
29-9-71 விஜயதசமித் தினத்தன்று புது வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
பரத நாட்டிய
ஆசிரியை:
திருமதி திரிபுரசுந்தரி யோகானந்தம்
சங்கீத ஆசிரியை:
திருமதி சத்தியபாமா இராஜலிங்கம்
சேர விரும்புவோர் தொடர்புகொள்ளவும். 59, முதலாம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7050
3039 7063

## விற்பனைக்கு
பீடாப்பாக்கும் சீவலும் தேவையானவும் சில்லறையாகவும் எம்மிடம் விற்பனைக்கு உள்ளது. ஆசோகன்ஸ், 25, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 3605

## விற்பனைக்கு
அரைத்த சந்தனம்! உயர் தரமான சந்தனக் கட்டைகளை யந்திரத்தில் அரைத்த சந்தனக் குழம்பு, வாசனை மிக்கது, குளிர்ச்சியானது. கோவில்களிலும் எல்லாவித மான வைபவங்களிலும் விழாக்களிலும் உபயோகிக்கச் சிறந்தது. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, மருந்துக்கடை, யாழ்ப்பாணம். 3523

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெஷின் கொம்பனி. 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524

## ராஜா (யாழ்ப்பாணம்)
இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
ரி. எம். சௌந்தரராஜன்
நடித்த

# கல்லும் கனியாகும்

## றீகல் (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
நடித்த
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்


# அடிமைப் பெண்

எல்லாப் பத்திரிகைகளும் ஏகோபித்துப் பாராட்டும் ஒரே படம்!

மக்கள் மன்றம் ஏற்றுக் கொள்ளும் மகத்தான குடும்பச் சித்திரம்!!

✯ தாய் என்பவள் தந்தை ஆகலாம்-தனயன் ஆகலாம் - ஆசான் ஆகலாம்-ஆண்டவன் ஆகலாம்!

✯ எந்த ஒரு இடத்தையும் தாயால் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் வேறு எவராலும் தாயின் புனிதமானஇடத்தை ஈடுசெய்யவே முடியாது.



✯ கடவுள் எல்லா இடத்திலும் இருக்க முடியாது என்பதால்தான் உலகில் தாயைப் படைத்தார்!

✯ தாய் என்பவள் காவியம்!
இது ஒரு தாயின் கதை!!
ஆகவே இது காவியத்தின் கதை!!!



## யாழ்.வின்ஸர் வெண்திரையில்
கொட்டகை நிறைந்த காட்சிகளுடன்
காண்பிக்கப்படுகிறது
தினசரி 4 காட்சிகள்

★ ஜெமினி கணேசன் ★
★ சௌகார் ஜானகி ★
(இரு வேடங்களில்)
ரவிச்சந்திரன்-எம். ஆர். ஆர். வாசு
எஸ்.வரலட்சுமி — வி.எஸ்.ராகவன்
பேபி டாலி
நடித்த





# காவியத் தலைவி

